மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## Children's Voices for Human Rights



Source: http://www.deccanchronicle.com/140731/nation-crime/article/most-child-abuse-cases-go-unreported

மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் - 70 - 2014

# தமிழகத்தின் தொடக்கப்பள்ளிகளில் சாதிய முடை நாற்றம்

– எஸ். வெங்கட நாராயணன்

*முற்போக்கான மாண்புகளைக் கொண்டுள்ள நவீனக் கல்வி நடைமுறையில் உள்ளது என்ற போதிலும்கூட இந்தியாவின் கல்வி நிலையங்களில் சாதிய அடிப்படையில் இன்னும் ஆதிக்கம் செலுத்துகின்றன. கல்விச் சாதனைகள் குறித்த பிராமணிய வழியிலானப் புரிதல்கள் நிலைபெற்றுள்ளன. இன்றைய நவீன தாராள அரசியல் பொருளாதாரச் சூழலில் சமூக நீதியைப் பொறுத்தமட்டில் அரசு மேலும் மேலும் வலுவற்றதாகவே மாறியிருக்கிறது.*

சமுதாய அனுபவங்களை – பண்பாடு, அறிவு, மொழி, நம்பிக்கைகள் உள்பட – அதன் முன்னேற்றங்களை, அதற்கான தடங்கல்களை ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றுவதில் ஒரு முக்கியப் பங்காற்றுவது கல்வி. இவ்வாறு மாற்றுவதில் குடும்பம், சமூகம், மதம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றோடு சேர்ந்து ஒரு அமைப்பு என்ற முறையில் பள்ளிக்கூடமும் முக்கியமாகச் செயலாற்றுகிறது (டேவே, 2004). ஆயினும், சமுதாய அனுபவம் என்பது பல்வேறு சமூகப் பிரிவுகளுக்கிடையே அவர்களது பொருளியல் நிலைமைக்கும் அத்துடன் இணைந்த சமூக நிலைமைக்கும் ஏற்ப மாறுபடுகிறது. இங்கே ஒரு (சர்ச்சைக்குரிய) கேள்வி எழுகிறது: இந்த மாறுபட்ட நடப்பு நிலைமைகளை இந்த அமைப்புகள் எந்த அளவிற்குக் கவனத்தில் கொள்கின்றன ?

சமுதாயத்தில் நிலவுகிற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் சமூகப் பாகுபாடுகளையும் மறுஉற்பத்தி செய்வதாகவே பள்ளி முறை இருக்கிறது என்கிறார் சமூகவியலாளர் பியேரி போர்டியூ. சமுதாயத்தின் ஏழ்மையான பிரிவுகளிலிருந்து வருகிற குழந்தைகளின் சமூகப் பண்பாட்டுத் தன்மைகள் குறித்து பொதுவாக பள்ளிகள் பொருட்படுத்துவது இல்லை. சமூகரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் அடித்தட்டுப் பின்னணிகளைக் கொண்ட மாணவர்களின் கல்விச் சாதனை தாழ்வாக இருப்பதற்கு இதுதான் முக்கியக் காரணமாகும். இது வகுப்பறைக்கு எதிரான அல்லது கல்விக்கு எதிரான ஒரு கலாச்சாரத்திற்கு இட்டுச் செல்கிறது. அந்த எதிர்ப்புணர்வைக் கண்டறிவது, மாற்றுவது, போக்குவது என்பதே பள்ளி முறையின் இலக்குகளாக இருக்க வேண்டும் (ஹர்கர், 1984). மாணவர்களின் கல்விச் சாதனையில் சமுதாயத்தில் நிலவுகிற ஏற்றத்தாழ்வான சமூகப் பொருளாதார நிலைமைகள் தாக்கம் செலுத்துகின்றன. தனிமனிதத் திறமை, கல்வித் தகுதி என்ற போர்வையில் சமூகப் படிநிலை அமைப்பை அப்படியே பராமரிக்க இது வழி வகுக்கிறது. இவ்வாறாக, கல்வி சார்ந்த வெற்றி என்பது பெரும்பாலும் பண்பாட்டு அனுபவங்களையும் சமூக உறவுகளையும் பொருளாதாரப் பின்புலங்களையும் சார்ந்ததாகவே இருக்கிறது. இந்த உண்மை எந்த ஒரு சமுதாயத்திலும் பெரும்பாலும் அங்கீகரிக்கப் படுவதில்லை.

**நல்ல சமூகத் தொடர்புகள் உள்ள ஒரு மேல்சாதியைச் சேர்ந்த படித்த இளைஞர் ஒருவருக்கு, நல்ல ஊதியத்துடன் கூடிய வேலைகள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு, அதே கல்வித் தகுதிகள் உள்ள ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்த இளைஞருக்குக் கிடைக்கக்கூடியதைவிட அதிகமாகும்.**

இந்தியாவின் சமூகப் பொருளாதாரக் களம் நெடுங்காலத்திய சாதிய அமைப்பின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக இருந்து வந்துள்ளது. மக்களின் பொருளாதார வாழ்வு, சமூக வாழ்வு இரண்டிலும் செயல்படுகிற சுரண்டல் அமைப்பின் தேவைகளுக்கும் கட்டாயங்களுக்கும் ஏற்ப அது வளர்ச்சியடைந்துள்ளது. மாறுபட்ட பொருளாதார நிலைமைகள் ஒருபுறம் இருக்க, “இறைவனால் தீர்மானிக்கப்பட்டது” என்ற அடிப்படையிலான உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற கண்ணோட்டங்கள் இந்தியச் சூழலில் ஒரு சிக்கலான பங்கு வகுக்கின்றன. இந்திய பள்ளி அமைப்பிலும், இதர துறைகளைப் போலவே, சாதி அடிப்படையிலான கண்ணோட்டங்களும் செயல்பாடுகளும் மிக அப்பட்டமாக இருக்கின்றன.

### உணர்வோடு கலந்த சாதியம்

நமது சமுதாயத்தில் சாதி அமைப்பிற்கும் அதன் பாகுபாடுகளுக்கும் எதிராக பல நூற்றாண்டுகளாக நீண்ட நெடும் போராட்டங்கள் நடந்து வந்துள்ளன. ஆனால், இன்றும் சாதியம் நமது பொதுவெளியிலும் தனி வாழ்க்கையிலும் பரவலாக இருக்கிறது. கருத்தியல் அடிப்படை, பொருளியல் அடிப்படை ஆகிய இரண்டையும் சார்ந்ததாகவே சாதியம் நிலைத்திருக்கிறது. ஆகவே, இந்த இரண்டில் எந்த ஒன்றை புறக்கணித்துவிட்டு போராட்டம் நடத்தினாலும் அது காலப்போக்கில் தோல்வியையே சந்திக்கும். இவ்வாறு கருத்தியலையும் பொருளாதாரக் கூறுகளையும் சார்ந்த படிநிலைகள் எதுவானாலும் சமத்துவமின்மைக்கும் சுரண்டலுக்குமே இட்டுச் செல்லும். ஆணாதிக்கம், இனவாதம், தேசியவாதம், சாதியம், வர்க்கம் உள்ளிட்ட படிநிலைகளில் இப்படித்தான் இருக்கிறது. நகைப்புக்குரிய ''முற்போக்கான'' தோற்றம் கொண்ட இன்றைய இந்தியச் சமுதாயம், இத்தகைய அனைத்து உள் முரண்பாடுகளோடுதான் இருக்கிறது. சமத்துவத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நம்பகமான தீர்வும் கண்ணுக்குப் புலப்படவில்லை. சமகாலத்திலும் தொடர்கிற சாதிய எதார்த்தம் பலரது மனசாட்சியை உறுத்தக்கூடும். ஆனால், நவீன தாராளமய அரசியல் பொருளாதாரம், நமது சமுதாயத்தில் ஏற்கனவே நிலவி வருகிற ஏற்றத்தாழ்வுகளை மேலும் மேலும் தீவிரப்படுத்தவே செய்கிறது.

டாக்டர். அம்பேத்கர் தமது 'சாதி ஒழிப்பு' புத்தகத்தில், ''சாதி அமைப்பானது தனி நபர்களுக்கு முன்கூட்டியே வேலைகளைப் பிரித்தளிக்கிற முயற்சியாக இருக்கிறது. அது அவர்களது உண்மையான திறன்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இல்லாமல் பெற்றோர்களின் சமூக நிலை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்கிறது,'' என்று கூறியுள்ளார். பிராமணிய சாதிக் கட்டமைப்பில் படிநிலை சார்ந்த சமத்துவமின்மை இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், பெரும் பகுதி மக்களுக்கு கல்வியை மறுப்பதாகவும் இருக்கிறது. அது சுரண்டலையும் பாகுபாட்டையும் தொடர்கிற முயற்சியேயாகும். பெரியார் நடத்திய சமூக நீதி போராட்டங்களும் சாதி முறையின் தீங்குகளை எடுத்துக்காட்டின. மக்களுக்கு சமமான கவுரவத்தையும் சமமான வாய்ப்புகளையும் மறுப்பதாக அந்தத் தீங்குகள் உள்ளன. அதன் மூலம் பெரும்பகுதி மக்கள் தங்களது உடல் சார்ந்த, மனம் சார்ந்த, அறநெறி சார்ந்த செயல்திறன்களை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன (வீரமணி, 2002). வெளிப்படையான சில சாதிப் பாகுபாடுகள் (குறிப்பிட்ட சில சாதியினருக்கு பள்ளிகளில் சேர அனுமதி மறுப்பு என்பது போன்ற பாகுபாடுகள்) மறைந்துவிட்டன என்றாலும், வகுப்பறைகளில் வர்க்க வேறுபாட்டோடு சேர்ந்ததாக, நுட்பமான வடிவங்களில் சாதிப்பாகுபாடுகள் தொடரவே செய்கின்றன. அந்தப் பாகுபாடுகள் பெரும்பகுதி மக்களை கல்வியிலிருந்து விலக்கி வைப்பதாகவும், கல்வி பெறும் முயற்சிகளிலிருந்து ஊக்கமிழக்கச் செய்வதாகவும் இருக்கின்றன. அரசாங்கத்தால் நடத்தப்படும் பல பள்ளிகளில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களையும் தலித் சமூகங்களையும் சேர்ந்த குழந்தைகள் வெளிப்படையான முறையில் சாதி அடிப்படையில் பாகுபடுத்தப்படுகிறார்கள். தனியார் பள்ளிகளிலோ பெரும்பகுதி மக்களுக்கு உள்ளே நுழைவதற்கான வாய்ப்பே தரப்படுவதில்லை. வர்க்க அடிப்படையில் விலக்கி வைக்கப்படுகிறார்கள். பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வளர்ந்துகொண்டிருப்பதாக இந்தியா சொல்லிக்கொண்டிருக்கிற இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும், இவ்வாறு மக்கள் விலக்கி வைக்கப்படுகிற, பாகுபடுத்தப்படுகிற இந்த வடிவங்கள் நிலைபெற்றிருக்கின்றன.

### பள்ளிகளில் சாதியம்:

கல்வி தொடர்பான சமுதாய அணுகுமுறையானது பண்பாட்டு நெறிகள், முன்மாதிரி அமைப்புகள், பொது விவாதங்கள் மற்றும் தொடர்புள்ள அம்சங்களின் வலுவான தாக்கத்திற்கு உள்ளாகிறது. கல்வி லட்சியங்களும், பள்ளி சார்ந்த முடிவுகளும் குறிப்பிடத்தக்க அளவிற்கு சமூகப் பரிமானத்தைக் கொண்டுள்ளன. உதாரணமாக, வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் உள்ள கல்வி எதிர்பார்ப்புகள், தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்த மக்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக இதர பிரிவு மக்களுக்கு உள்ள கண்ணோட்டத்தின் தாக்கத்திற்கு உள்ளாகின்றன. பெற்றோர்களிடமிருந்து கிடைக்கக்கூடிய கல்வி, தூண்டுதல், பள்ளியின் தரம், இவை தொடர்பான இதர விஷயங்கள் ஆகியவற்றை முறைப்படுத்திய பிறகும்கூட பட்டியல் சாதிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஒரு உள்ளார்ந்த குறைபாடு இருக்கிறது. அதாவது, மற்ற குழந்தைகளைவிட இவர்கள் பள்ளிக்குச் செல்வது குறைவுதான். இது பள்ளி முறையில் இக்குழந்தைகளுக்கு எதிரான ஒட்டுமொத்தப் பாகுபாடு தொடர்ந்து நீடிப்பதைத்தான் காட்டுகிறது.

இந்த பாகுபாட்டிற்கு பல்வேறு காரணங்கள் இருக்கக்கூடும் என்பதை டிரேஸ், கிங்டன் (1999) இருவரும் வெளிப்படுத்தியுள்ளனர். முதலாவதாக, பாரம்பரியமான மேல்சாதிக் கண்ணோட்டம். அதாவது தாழ்ந்த சாதியினருக்கு கல்வி பொறுத்தமானது அல்ல என்ற கண்ணோட்டம். இது இன்றளவும் கனிசமான

அளவிற்கு சமுதாயத்தில் தாக்கம் செலுத்துகிறது. இந்தக் கண்ணோட்டம் நலிவுற்ற சாதிகளிலிருந்து வரக்கூடிய குழந்தைகளின் கல்வி எதிர்பார்ப்புகளைச் சுருக்குகிறது. தங்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ள அவர்களுக்கு பெற்றோர்களிடமிருந்தும் சமூகத்திலிருந்தும் கிடைக்கக்கூடிய ஆதரவும் சுருங்குகிறது. இரண்டாவதாக, பல்வேறு மாறுபட்ட சாதிகளுக்கு கல்வியின் மூலம் கிடைக்கக்கூடிய பொருளாதார பலன்களும் இதர பலன்களும் மாறுபடக்கூடும். உதாரணமாக, நல்ல சமூகத் தொடர்புகள் உள்ள ஒரு மேல்சாதியைச் சேர்ந்த படித்த இளைஞர் ஒருவருக்கு, நல்ல ஊதியத்துடன் கூடிய வேலைகள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு, அதே கல்வித் தகுதிகள் உள்ள ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்த இளைஞருக்குக் கிடைக்கக்கூடியதைவிட அதிகமாகும். மூன்றாவதாக ஒதுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் கல்வியின் முறைக்கு உள்ளே இப்போதும் பாகுபடுத்தப்படுகிறார்கள்.

தற்போதைய பள்ளி முறையில் தாழ்ந்த சாதி குழந்தைகளுக்கு எதிரான பாகுபாடுகள் பரவலாக, ஆனால் நுட்பமான வடிவங்களில் இருக்கின்றன. பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளிலேயே இருக்கக்கூடிய தலித் குடியிருப்புகளுக்கு எதிரான பாகுபாடுகள் காட்டப்படுவது, தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்த குழந்தைகளைத் தொடுவதற்கு ஆசிரியர்கள் மறுப்பது குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்த குழந்தைகளை வாய்மொழி வசவுகளுக்கும், உடல் சார்ந்த தண்டனைகளுக்கும் குறிப்பாக உட்படுத்துவது, தாழ்ந்த சாதி குழந்தைகளை அடிக்கடி மேல்சாதி குழந்தைகள் அடிப்பது போன்ற உதாரணங்களைச் சொல்ல முடியும். இந்தியாவின் தொடக்கப் பள்ளிகளிலிருந்து தலித் குழந்தைகள் பெருமளவுக்கு சமூக அடிப்படையில் விலக்கி வைக்கப்படுவது என்பது அந்தப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் பாகுபாடாக அணுகுமுறை காரணமாகவே நிகழ்கிறது. சாதி அடிப்படையில் குழந்தைகளைப் பாகுபடுத்துவதில் ஆசிரியர்களின் பங்கு குறித்த நம்பகமான புள்ளி விவர ஆய்வு எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இருந்தாலும் கூட, சிறிய அளவில் நடத்தப்பட்ட ஆய்வுகளும், ஓரளவு ஆதாரங்களும் பள்ளிகளில் கடைபிடிக்கப்படும் பயிற்று முறையால் தலித் குழந்தைகள் எதிர்மறையான பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள், அவர்கள் தொடக்கப்பள்ளிகளிலிருந்து வெளியேறுமாறு தள்ளப்படுகிறார்கள் என்று காட்டுகின்றன (ராமச்சந்திரன், 2004).

இந்தியப் பள்ளிகளில் பெரும்பாலான ஆசிரியர்கள் மேல்சாதிகளைச் சேர்ந்தவர்களே, அவர்கள் வகுப்பறைகளில் தங்களது பிற்போக்குத்தனமான சாதிச் சிந்தனைகளைப் புகுத்த முயல்கிறார்கள் என்று கூறுகிறார் ஆய்வாளர் கபீர் (2006). இதனால் தலித் குழந்தைகள் பள்ளிகளில் மட்டமான வேலைகளை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள். இது சமுதாயத்தில் உள்ள சாதிய அடிப்படையிலான வேலைப் பாகுபாடுகளை மீண்டும் கட்டமைப்பதாக இருக்கிறது.

தொடக்கப் பள்ளிகளில் சேரும் தலித் குழந்தைகளின் 50 சதவீதத்தினர் 5ம் வகுப்பிலேயே வெளியேறுகிறார்கள், பெரும்பாலான குழந்தைகள் 3ம் வகுப்பை அடைவதற்கு முன் விலகுகிறார்கள் என்று குறிப்பிடுகிறார் நம்பீசன் (2001). தமிழ்நாட்டில் தலித் குழந்தைகள் செல்கிற பள்ளிகளுக்கும், தலித் அல்லாத குழந்தைகள் செல்கிற பள்ளிகளுக்கும் இடையே உள்கட்டுமான வசதிகளில் பெரும் வேறுபாடுகள் இருப்பதை மஜூம்தார் மேற்கொண்ட ஒரு ஆய்வு காட்டுகிறது (2001). தலித் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் குடிநீர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த தனியார் பள்ளிகள் குழந்தைகளைக் கவருவதற்கு போட்டிபோடுகின்றனர். அந்தப் பள்ளிகளில் சேரும் குழந்தைகளில் பெரும்பாலோர் ஒப்பீட்டளவில் வசதியுள்ள பிற்படுத்தப்பட்ட சாதிகளையும், முன்னேறிய சாதிகளையும் சேர்ந்தவர்களேயாவர். மிகவும் ஏழைகளாக உள்ள, நிலமற்ற குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளைப் பொறுத்தவரையில் கற்பதற்கான சூழல், ஆசிரியர்களின் அணுகுமுறை, வீட்டிலிருந்து/ பெற்றோரிடமிருந்து கிடைக்கும் ஆதரவு, பள்ளி சார்ந்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்கான பொருளாதாரம் ஆகியவை அந்தக் குழந்தைகளை பள்ளிகளிலிருந்து வெளியே தள்ளுகிற முக்கிய அம்சங்களாக உள்ளன. தலித் அல்லது பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளின் மனத்திறன் குறித்த எதிர்மறையான, ஒரே மாதிரியான கருத்துகளை திரும்பத் திரும்பச் சொல்லுவது சில குழந்தைகளிடையே நுட்பமான – சில நேரங்களில் அப்பட்டமான – பாகுபாடுகளுக்கு இட்டுச் செல்கிறது.

மேலும், தனியார்மயத்தை ஊக்குவிக்கும் அரசின் நவீன தாராளமயக் கொள்கை, கல்வி வாய்ப்புகளைப் பெறுவதில் தற்போதுள்ள படிநிலைகளை கெட்டிப்படுத்துவதாக இருக்கிறது. அரசுப் பள்ளிகளில் (அரசாங்கத்தின் சமூகச் செலவீனங்கள் வெட்டப்பட்டதன் காரணமாக) நிலவும் மோசமான உள்கட்டுமான வசதிகள், அதன் விளைவாக மாணவர்களிடமிருந்து வெளிப்படும் குறைவான திறன் ஆகியவை தனியார் பள்ளிகளில் அதிக மாணவர்கள் சேருவதற்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன. அரசுப் பள்ளிகளின் மோசமான நிலைமைக்கான காரணங்களில் ஒன்று, கற்பிப்பதிலும் கற்றுக்கொள்வதிலும் ஆசிரியர்களுக்கு உள்ள அக்கறையற்ற அணுகுமுறையும், ஏழைக்

குடும்பங்களிலிருந்தும் ஒதுக்கப்பட்ட சாதிகளிலிருந்தும் வருகிற மாணவர்கள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் எதிர்கொள்கிற கடுமையான நிலைமைகளை பொருட்படுத்தத் தவறுவதுமேயாகும். நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அரசுப் பள்ளிகளின் செயலற்ற தன்மை கவலைக்குரிய ஒன்றாக மாறியுள்ளது. சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வலுவான நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் தனியார் பள்ளிகளுக்குச் செல்கின்றன. அரசுப் பள்ளிகள் சிறப்பாகச் செயல்பட்டாக வேண்டும் என்ற கட்டாய நிலைமை வெகுவாகச் சரிவடைந்து வருகிறது (ராமச்சந்திரன், சாய்ஜீ – 2002).

### பாகுபாடு

சென்னையின் தியாகராயநகர், ராயபுரம் ஆகிய பகுதிகளில் 2009 ஜுலை முதல் டிசம்பர் வரை பள்ளிகளில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. புதுதில்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக 2011ல் சமர்ப்பிக்கப்பட்ட அந்த ஆய்வறிக்கை பின்வரும் தகவல்களைத் தெரிவிக்கிறது: நவீன தாராளமய அரசியல் பொருளாதாரச் சூழலில் ஒட்டுமொத்தக் கல்வித்தரம் குறித்து அரசுப் பள்ளிகளிலும், அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளிலும், அரசு நிதி உதவி பெறாத தனியார் பள்ளிகளிலும் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. ஊதியத்தைப் பொறுத்தவரையில் தனியார் பள்ளி ஆசிரியர்களோடு ஒப்பிடுகையில் அரசுப் பள்ளி ஆசிரியர்களும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களும் நல்ல நிலையில் உள்ளனர். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பள்ளிகளில் பெரும்பாலான ஆசிரியர்கள் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு கற்றுக்கொடுப்பதில் நல்ல பயிற்சிப் பெற்றுள்ளனர். அரசு உதவி பெறாத, தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டாக வேண்டும் என்ற நிர்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள். அரசுப் பள்ளி ஆசிரியர்களும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்கள் விஷயத்திலும், தங்களது ஆசிரியர் தொழில் விஷயத்திலும் அக்கறையற்ற அணுகுமுறையோடுதான் இருக்கிறார்கள். அவர்களது வேலை நிரந்தரமானது என்பதும், அவர்களது மாணவர்களில் பெரும்பாலோர் தாழ்ந்த சாதிகளையும் வர்க்கங்களையும் சார்ந்தவர்கள் என்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

வகுப்பறைகளில் நடத்தப்பட்ட கள ஆய்வுகள், அரசுப் பள்ளி ஆசிரியர்களும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களும் எந்த அளவிற்கு, எவ்வித உறுத்தலும் இல்லாமல் குழந்தைகளிடம் சாதி ரீதியான பாகுபாடுகளை வெளிப்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. நல்ல ஊதியம் வழங்கப்பட்டாலும் கூட, கற்றுக்கொள்வதில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தத்தக்க வகையில் அவர்கள் செயல்முனைப்போடு ஈடுபடுவதில்லை. அதற்குக் காரணம் அவர்களது செயல்பாடுகளையும் நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கான பயனுள்ள ஏற்பாடு எதுவும் இல்லை என்பதுதான். இந்தப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களிலிருந்து வருகிறவர்கள் என்பதால், ஆசிரியர்கள் முனைப்புடன் செயல்பட்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதுவும் இல்லை. அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளிலும் தலித்/பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும் கணிசமாக உள்ளனர். அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகளிலோ முன்னேறிய சாதிகளையும், பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய பிரிவுகளையும் சேர்ந்த குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்கள். தலித் /பழங்குடி மாணவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். அரசு உதவி பெறும் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக உள்ள ஒரு பெண் தன் தலித்/பழங்குடி மாணவர்களிடமும், பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களிடமும் இவ்வாறு கூறினார்:

> “எருமைகளா, நீங்களெல்லாம் எப்பவுமே மாறமாட்டீங்க. உங்களால எப்பவுமே படிக்க முடியாது. பள்ளிக் கூடத்துக்கு வர்றதுக்கு பதிலா வேறு எங்கேயாச்சும் வேலைக்குப் போங்க” என்னைக் கஷ்டப்படுத்தறதுக்காகத்தான் இங்கே வர்றீங்க.”

ராயபுரம் பகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் ஆதி–ஆந்திரா (தலித்) சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மக்கள் பெரும்பாலும் சென்னை மாநகராட்சியில் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள். இப்பகுதியில் உள்ள, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளும் பிரதானமாக தலித்/பழங்குடி சமூகங்களின் மாணவர்களுக்கே சேவை செய்கின்றன. இந்த சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் தங்களது பிழைப்புக்காக சிறு சிறு வேலைகளில் ஈடுபடுகிறவர்கள். நிரந்தரமான குடியிருப்பு வசதி இல்லாதவர்கள். இந்தப் பள்ளிகளில் கற்பதற்கான அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. மேலும் அவை சுகாதாரமற்ற நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளன. குழந்தைகளிடம் ஆசிரியர்களின் அணுகுமுறை, கல்வி தொடர்பாக அவர்களது சாதி அடிப்படையிலான கண்ணோட்டங்களை தெளிவாகக் காட்டுகிறது. அரசுப்

பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியை (முன்னேறிய சாதியைச் சேர்ந்தவர்) இவ்வாறு கூறினார்:

> ''இந்தப் பசங்க ஒரு போதும் திருந்தமாட்டாங்க'' அவங்களால தெளிவா பாடம் படிக்கவும் முடியாது. அரசாங்கம் கொடுக்கிற மதிய உணவுக்காகத்தான் அவங்க பள்ளிக் கூடத்திற்கு வர்றாங்க.''

குழந்தைகள் நல்ல செயல்திறனை வெளிப்படுத்தாதது குறித்து இந்த ஆசிரியர்கள் கூறும் சாதியம் சார்ந்த கருத்துகள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளன. மாணவர்களின் ஏழ்மையான வர்க்கப் பின்னணி அவர்களது அவலங்களை மேலும் அதிகப்படுத்துகிறது. இந்த அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில் ஆசிரியர்களுக்கு அரசாங்க விகிதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. அவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்களாகவும் உள்ளனர். ஆனால், குழந்தைகளிடம் அவர்கள் இணக்கமற்றவர்களாகவும், வெறுப்போடுமே நடந்துகொள்கிறார்கள். அதற்குக் காரணம் பெரும்பாலான குழந்தைகள் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக, ஏழ்மையான சமூக பொருளாதாரப் பின்னணி கொண்டவர்களாக இருப்பதுதான். கொடுத்த வேலையைச் செய்யவில்லை என்றால் அல்லது கற்கும் திறன் மோசமாக இருந்தால் உடல் ரீதியான தண்டனை வழங்கப்படுவது சர்வசாதாரணம்.

> ''சுதந்திரம் கிடைச்சு ஐம்பது வருஷத்துக்குப் பிறகும் நீங்களெல்லாம் திருந்த மாட்டேங்கிறீங்க. அரசாங்கம் உங்களுக்காக நிறைய வசதி செஞ்சு கொடுக்குது. ஆனாலும் நீங்களெல்லாம் இப்படியேதான் இருக்கப் போறீங்க, – என்று அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஒன்றின் தலைமையாசிரியை (பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்) கூறுகிறார்.

அரசாங்கத்தால் நடத்தப்படும் இந்தக் கல்வி நிறுவனங்களில் சமூகப் படிநிலைக் கட்டமைப்பும், அது சார்ந்த சாதியப் பாகுபாடுகளும் வெளிப்படையாக கடைப்பிடிக்கப்படுகின்றன. முறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளோ ஆய்வு செய்யும் ஏற்பாடுகளோ வலுவாக இல்லை என்பதால் தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிகளில் சாதி அடிப்படையிலான அவமதிப்புகளைச் சந்திக்கிறார்கள் என்பதே அவர்களது அன்றாட அனுபவமாக இருக்கிறது. குழந்தைகளிடையே ஒரு இணக்கமான சூழலை ஏற்படுத்துவதிலும், அவர்களது உள்ளார்ந்த கற்கும் ஆற்றலை தூண்டிவிடுவதிலும் புதிய அறிவுத் தளங்களைத் தேட வைப்பதிலும் பள்ளிச் சூழல் ஒரு முக்கிய பங்காற்றுகிறது.

அரசுப் பள்ளி ஆசிரியர்களும், அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களும் கடைப்பிடிக்கிற அக்கறையற்ற, சோம்பேறித்தனமான அணுகுமுறையும், சிறு குழந்தைகளிடம் அவர்கள் காட்டுகிற சாதி/வர்க்க பாகுபாடுகளும், அந்தக் குழந்தைகளின் கல்வித் திறனில் அழிக்க முடியாத எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்திவிடும். இந்தப் பள்ளிகளில் ஏழைகளிலும் ஏழைகள்தான் பயில்கிறார்கள் என்பதால், இப்பள்ளிகளின் ஆசிரியர்கள் சிறப்பாக செயல்பட்டாக வேண்டும் என்ற சமூகக் கட்டாயம் எதுவும் இல்லை. ஆசிரியர்களின் இத்தகைய அணுகுமுறையும், பள்ளிகளின் மோசமான உள்கட்டமைப்பு வசதிகளும் சேர்ந்து, கல்வித் தேடலோடு வருகிற குழந்தைகளுக்கு ஒரு இணக்கமற்ற சூழலையே ஏற்படுத்துகின்றன.அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகளில் சாதிய அடிப்படையிலான பாகுபாடுகளைக் காண முடியவில்லைதான். ஆனால், இந்தப் பள்ளிகளின் கட்டண விகிதங்களும், ஆண்டு முழுவதும் இப்பள்ளி நிர்வாகங்கள் பல பெயர்களில் வசூலிக்கிற கூடுதல் பணமும் இயல்பாகவே ஏழைகளை தொலைவில் தள்ளி வைக்கின்றன. அந்தக் குழந்தைகள் பெரும்பாலும் தலித்/பழங்குடி சமூகங்களையும், ஏழ்மையான பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளையும் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

**நிறைவாக**

இங்கு விளக்கப்பட்டுள்ள சாதிய அடிப்படையிலான கண்ணோட்டங்களும் பாகுபாடுகளும் குறிப்பிட்ட பள்ளிகளுக்கு என உரியவை அல்ல. தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்களிடம் நமது சமுதாயத்திற்கு உள்ள பொதுவான அணுகுமுறையைத்தான் இவை பிரதிபலிக்கின்றன. இத்தகைய கடுமையான நிலைமைகளையும் பாகுபாடுகளையும் கடந்து கல்வியின் மேற்படிகளைத் தொடுவது ஒரு சில குழந்தைகளுக்குத்தான் சாத்தியமாகும். அப்படி மேல்நிலைக்குச் செல்கிற போதிலும் கூட ''தகுதி'' என்ற பெயரால் புறக்கணிக்கப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எதிரான உள்ளார்ந்த வெறுப்புணர்வும், குழந்தைகள் நன்றாகப் படிக்கவில்லை என்பதற்கும் அவர்களது சாதிப் பின்னணிக்கும் சம்பந்தம் இருக்கிறது என்ற குருட்டுத்தனமான நம்பிக்கையும் குழந்தைகளின் ஒட்டுமொத்த கல்வி வளர்ச்சியில் தாக்கம் செலுத்துகின்றன. ஆசிரியர்களிடையே காணப்படும் இந்த அக்கறையற்ற போக்கு, ஒட்டுமொத்தத்தில் நமது சமுதாயத்தின் சாதி அடிப்படையிலான பாகுபாட்டுப் படிநிலையைத்தான் பிரதிபலிக்கிறது.

**ஆதாரம்:** ஜுன் 28, 2014 VOL XLIX NO. 26 & 27
Economic & Political Weekly

# இறுதியில் பெண்கள்தான் குற்றவாளிகளா?

**– ஃபிளேவியா ஆக்னஸ், ஆந்த்ரே டிமெல்லோ**

*அதிகாரத் தரப்பின் செல்வாக்கால் வல்லுறவு வழக்குகள் பொய் வழக்குகளாக மாற்றப்படுகின்றன.*



வன்முறைக்கு ஆளாகும் பெண்கள் தொடர்பான வழக்குகளில், உதவும் பெண் வழக்கறிஞர்களாக கடந்த 20 ஆண்டுகளாக நாங்கள் இருக்கிறோம். அந்த அனுபவங்களி லிருந்து சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

மும்பையில் எங்கள் அலுவலகம் அமைந்துள்ள பகுதியைச் சேர்ந்த பள்ளியில் வாட்ச்மேனால் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்ட நான்கு வயதுச் சிறுமியின் தாய்க்கு உதவ குற்றவியல் நீதிமன்றத்துக்கு 2011–ல் சென்றோம். அந்தப் பள்ளியின் பெண் முதல்வர் கொடுத்த நெருக்குதல் காரணமாக, போலீஸார் முதல் மூன்று நாட்களுக்கு அந்தச் சிறுமியின் தாய் தந்த புகாரை ஏற்கவோ, முதல் தகவல் அறிக்கையை (எஃப்.ஐ.ஆர்.) தாக்கல் செய்யவோ முன்வரவில்லை. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அந்தச் சிறுமியின் உடல்ரீதியான கடும் பாதிப்புகளை மருத்துவமனை ஆதாரபூர்வமாகத் தெரிவித்த பிறகே போலீஸார் முதல் தகவல் அறிக்கையைப் பதிவுசெய்தனர்.

இதற்குள் உள்ளூர் பத்திரிகைகளில் அந்தச் சிறுமியின் அன்னைக்கு புத்திபேதலித்திருப்பதாகவும், இந்தப் புகாரை மேற்கொண்டு வலியுறுத்தாமல் இருக்க பள்ளி நிர்வாகத்திடம் 10 லட்ச ரூபாய் கேட்டார் என்றும் செய்திகள் வரத்தொடங்கின. வேறு மாநிலத்திலிருந்து வந்து வேலை செய்யும் அந்த அப்பாவித் தாய்க்கு, தான் யாருக்கு எதிராகப் போராடுகிறோம் என்றே புரியவில்லை.

செல்வாக்கு மிக்க அந்தப் பள்ளிக்கூட நிர்வாகத்துக்கு எதிராக, அந்தத் தாய்க்குத் துணையாக நாங்கள் களமிறங்கினோம். அரசுத் தரப்பு வழக்கறிஞர் வழக்கைக் கைவிட்டுவிட்டார். குற்றம்சாட்டப்பட்டவர்கள் சார்பிலோ மிகச் சிறந்த வழக்கறிஞர் நியமிக்கப்பட்டிருந்தார். நாங்கள் தீவிரமாகப் போராடி, எதிரிக்குத் தண்டனை பெற்றுத்தந்தோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இப்படித்தான் நாங்கள் களமிறங்கத் தொடங்கினோம்.

## தெரியவந்த உண்மைகள்

அப்போது பாலியல் குற்றங்கள் தொடர்பாக எங்களுடைய கண்ணோட்டமும் பெரும்பாலான மக்களிடையே நிலவுவதைப் போன்றே இருந்தது. எல்லா பாலியல் வன்புணர்ச்சியும் அறிமுகம் இல்லாதவர்களால் மேற்கொள்ளப்படுவது என்றே நினைத்தோம். ஆனால், வழக்குகளைத் தொடர்ந்து ஆராய்ந்தபோதுதான், புதியவர்களால் பாதிப்புக்கு உள்ளாவது குறைவு என்பதையும், ஏற்கெனவே அறிமுக மானவர்கள், நண்பர்கள், உறவினர்கள் வட்டத்தில் இருப்பவர்கள்தான் அதிகம் இதில் ஈடுபடுகின்றனர் என்பதையும் உணர்ந்தோம். பாதிப்புக்குள்ளான பெண்ணிடம், குற்றம்சாட்டப்பட்டவரையே திருமணம் செய்துகொள்கிறாயா ? என்று நீதிபதி கேட்டதாகப் பத்திரிகைகளில் படித்தபோது நெளிந்தோம். இது நல்ல வழக்கு, இது போலி வழக்கு என்று போலீஸாரும், வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களும் பேசும்போது எங்களுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். உயர் நீதிமன்றங்களிலும் உச்ச நீதிமன்றத்திலும் நடந்த இத்தகைய வழக்குகளின் தீர்ப்புகளைப் படித்தபோது, தெரிந்துகொள்ளாத பல உண்மைகளை, வழக்குகளை நேரில் கையாளும்போதுதான் தெரிந்துகொண்டோம்.

## வழக்குகளில் ஆராய்ச்சி

கடந்த மூன்று ஆண்டுகளில் 350–க்கும் மேற்பட்ட வழக்குகளைக் கையாண்டோம். குற்றப்பத்திரிகைகளை ஆழ்ந்து வாசித்தோம். நீதிமன்ற நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்தோம். காவல் துறையினர், மருத்துவத் துறையினர், வழக்கை நடத்துபவர்கள் ஆகியோருடன் கலந்துரையாடினோம். எல்லாவற்றுக்கும் சிகரமாக, பாதிக்கப்பட்ட பெண்களுடன் பயணம் செய்து பேசி, அவர்களைத் துணிவுகொள்ளச் செய்தோம். எங்களுடைய ஆய்வு முடிவுகளும், தி இந்து(ஆங்கிலம்) டெல்லியில் 2013–ல் நடந்த வழக்குகளின்போது நடத்திய ஆய்வு முடிவுகளும் ஒன்றுபோலிருந்தன. இந்த வழக்குகளில் மூன்றில் ஒரு பகுதி காதலர்கள் வீட்டைவிட்டு ஓடிப்போகும் வகை. திருமணம் செய்துகொள்கிறேன் என்று ஆண் கூறும் வார்த்தையை நம்பி அவனுடன் வரம்புகடந்து பழகி, தாய்மை அடைவதால் ஏற்படும் வழக்குகள் எண்ணிக்கையும் மூன்றில் ஒரு பங்கு. இவ்விரு வகை வழக்குகளைத்தான் அதிகாரிகள் பொய் வழக்குகள்' என்று முத்திரை குத்துகின்றனர்.

### தண்டனை பெறுவோர் குறைவு

பாலியல் வல்லுறவு வழக்குகளில், தண்டனை விதிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை 25 என்று தேசிய குற்றப்பதிவேடுகள் துறை (என்.சி.ஆர்.பி.) தெரிவிக்கிறது. ஆனால், நாங்கள் மேற்கொண்ட ஆய்வில் மும்பையில் மட்டும் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை வெறும் 10 முதல் 12 –க்கு உள்ளாகவே இருக்கிறது. பாதிக்கப்பட்ட பெண்ணே பிறகு வாக்குமூலத்தை மாற்றுவது, முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்யத் தாமதிப்பது, பழுதான விசாரணை, அரைகுறையான சாட்சியங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்களில் முரண்பாடுகள், வழக்குகளின் சுமை தாளாமல் பிதுங்கும் அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள், 18 வயதுக்குக் குறைந்த பெண்ணாக இருந்தாலும் குற்றவியல் வழக்கறிஞர்கள் நடத்தும் தீவிர குறுக்கு விசாரணைகள், வழிகாட்டு நெறிகளையும் மரபுகளையும் பின்பற்றாத நீதிமன்றங்கள், அனுபவமற்ற நீதிபதிகள்... இதுபோன்ற காரணங்களால் வழக்குகள் தேக்கமடைவதுடன், குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து தப்பிப்பதும் அதிகமாக இருக்கிறது. ஒரு வழக்கில், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படுவதிலிருந்து இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும்வரை நடப்பவற்றைக் கூர்ந்து பின்பற்றினால் இது நமக்குப் புரியும். இனி, சில வழக்குகளைப் பார்ப்போம்.

### சாந்த் கதை

16 வயதான சாந்த் என்ற பெண்ணுக்கு ஒரு சிநேகிதன் இருந்தான். அவனிடம் மனம்விட்டுப் பேசியபோது, அதிர்ச்சிகரமான தகவல் தெரியவந்தது. தன்னுடைய தந்தையே தன்னிடம் முறைகேடாக நடந்துகொள்வதாகவும் தன்னை அவரிடமிருந்து மீட்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டாள். இந்த விஷயம் அவளுடைய தாய்க்கும் தெரியும் என்றாலும், இதை யாரிடம் சொல்வது, என்ன செய்வது, குடும்ப மானம் என்னாகும் என்றெல்லாம் குழம்பி, அந்தத் தாய் வேதனையில் துடித்துக்கொண்டிருந்தார். காவல் துறையில் புகார் செய்யுமாறு அவளுடைய சிநேகிதன் கூறினான். அவள் கூறிய புகாரைப் பதிவுசெய்வதற்கு முன்னால் காவல் துறையினர் அந்தப் பெண்ணின் பெற்றோரையும் சமூகப் பெரியவர்களையும் அழைத்தனர். தந்தை கைதுசெய்யப்பட்டார். மருத்துவப் பரிசோதனையின்போது சாந்த் தொடர்ந்து அழுது கொண்டிருந்தாள். அதிர்ச்சியிலிருந்து மீள அவளுக்கு உளவியல் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அதே சமயம், அவளைக் காப்பகத்துக்கு மாற்றாமல் அதே வீட்டிலேயே தங்கவைத்தனர். தந்தையையே கைது செய்ய வைத்துவிட்டாயே என்று உறவினர்கள் அந்தப் பெண்ணை வசைபாடினர். வழக்கு விசாரணை யின்போது சாந்த், தனது வாக்குமூலத்தை மாற்றிவிட்டாள். தன்னுடைய தந்தை மீது தான் கூறிய புகாரையே இல்லையென்று மறுத்தாள். தன்னுடைய சிநேகிதனுடன் உறவுகொண்டதால்தான் தனக்குக் காயங்கள் ஏற்பட்டதாகக் கூறினாள். அரசுத் தரப்பு வழக்கறிஞர் அந்தக் கட்டத்தில் குறுக்கிட்டு, அவரைப் பரிசோதித்த டாக்டர்களை விசாரணைக்கு அழைக்கவேயில்லை. சாந்த் இப்படிக் கூறியதால் அவளுடைய தகப்பனார் விடுதலை செய்யப்பட்டார். இருவரும் மீண்டும் அதே வீட்டில் வாழ்ந்தனர். அதற்குப் பிறகு, அந்தப் பெண்ணின் மனநிலை எந்த அளவுக்குப் புண்பட்டிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

### சீமாவின் குடிகாரத் தந்தை

வீட்டுவேலை செய்யும் பெண்ணின் மகள்தான் சீமா (13). அவளைவிட வயதில் பெரிய பணக்காரச் சிறுவன், தனக்குப் பிறந்த நாள் என்று கூறி அழைத்துச் சென்று குளிர்பானம் கொடுத்தான். மயங்கிவிழுந்த அவளைத் தன்னுடைய மூன்று நண்பர்களுடன் சேர்ந்து வல்லுறவு கொண்டான். மயக்கம் தெளிந்த சீமா, தனக்கு ஆடை இல்லாததையும் ரத்தப்போக்கு ஏற்பட்டிருப்பதையும் அறிந்து அழுதுகொண்டே வீட்டை அடைந்தாள். அவளுடைய தாய், சீமாவை முனிசிபல் மருத்துவமனையில் சேர்த்தாள். போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். சீமா அந்தக் குற்றவாளியை அடையாள அணிவகுப்பில் சரியாகவே அடையாளம் காட்டினாள். சீமாவை அரசுக் காப்பகத்தில் தங்கவைத்தனர். சட்ட விரோதச் செயலில் ஈடுபட்ட இன்னொரு பெண்ணையும் அங்கே சேர்த்திருந்தனர். அந்தப் பெண் யாருடைய ஏற்பாட்டின்பேரிலோ சீமாவை அடித்துத் துன்புறுத்தினாள். எனவே, சீமாவை போலீஸார் வீட்டுக்கு அனுப்பிவிட்டனர்.

சீமாவின் தந்தை குடிகாரன். குடும்பப் பொறுப்பில்லாத அவன், வழக்கு விசாரணையின்போது, குற்றம்சாட்டப் பட்டவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர்களுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தான். இதன் பிறகு, சீமா வாக்குமூலத்தை மாற்றிக்கொண்டாள். எதிரிகளை அடையாளம்காட்ட மறுத்தாள். மரபணுச் சோதனையில் அந்த நான்கு பேரும் குற்றம் செய்தது நிரூபிக்கப்பட்டது. ஆயினும் சீமா தன்னுடைய வாக்குமூலத்தை மாற்றியதால் நான்கு எதிரிகளும் விடுதலை பெற்றனர். மும்பையில் சக்தி மில்லில் நடந்த பாலியல் வல்லுறவு வழக்கில் தொடர்புடைய மூன்று எதிரிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட அதே நாளில்தான் சீமா வழக்கு விசாரணையும் முடிவுக்கு வந்தது.

இப்படிப் பல வழக்குகளில் எதிரிகள்' விடுதலை யாகிவிடுகின்றனர். இதனாலேயே இந்த வழக்குகளை பொய் வழக்குகள்' என்பது மிகவும் ஆபத்தானது. எனவே, இந்த வழக்குகள் தொடர்பான நம்முடைய அணுகுமுறையும் கண்ணோட்டமும் மாற வேண்டும்.

**– தமிழில்: சாரி**

**ஆதாரம்: தமிழ் இந்து, 29.8.2014**

# எது சமச்சீர்க் கல்வி?

– வ. கீதா

## சமச்சீர்க் கல்விப் பாடத்திட்டத்தைப் பற்றி ஆய்வின் அடிப்படையில் ஓர் அலசல்

சமச்சீர்க் கல்வி தொடர்பான சர்ச்சைகள் தீர்ந்தபாடில்லை. அண்மையில், சென்னையில் உள்ள தனியார் பள்ளியுடன் தொடர்புடைய ஆய்வு நிறுவனம் ஒன்று, சமச்சீர்ப் பாடநூல்களை ஆய்வுசெய்து அவற்றின் சாதகபாதகங்கள்குறித்த அறிக்கையை வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த அறிக்கை இப்படிக் கூறுகிறது: கற்றலின் சுமை குறைந்துள்ளது; பாடநூல்கள் படிக்க, புரிந்துகொள்ள எளிதாக உள்ளன. மாணவர்கள் சிந்திப்பதை ஊக்குவிக்கும் வகையில் பாடநூல்கள் அமைந்துள்ளன. அதே சமயம், பாடநூல்களின் தரம்குறித்தும் நாம் யோசிக்க வேண்டியுள்ளது; குறிப்பாக, ஆங்கிலப் பாடங்களின் தரம் போதுமான அளவுக்கு இல்லை; மேலும், இந்தப் பாடநூல்களைப் படித்துவிட்டு மாணவர்களால் உயர் கல்விக்கான போட்டியில் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள முடியும் என்று தோன்றவில்லை.



சமச்சீர்ப் பாடங்கள் தொடர்ந்து மதிப்பிடப்பட வேண்டியவை என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், ஆய்வில் துலங்கியுள்ள கண்டுபிடிப்புகள்' சமச்சீர்க் கல்விகுறித்துத் தனியார் (முன்னாள்) மெட்ரிக் பள்ளிகளும் அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோரும் தொடர்ந்து முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் ஒத்தவையாக இருப்பதுதான் இங்கு கவனிக்க வேண்டியது.

## சமச்சீர்க் கல்வித் திட்டத்தின் நிறை, குறைகள்

மிகக் குறுகிய காலகட்டத்தில் கொண்டுவரப்பட்ட பாடத்திட்டமல்ல சமச்சீர்க் கல்வித் திட்டம். ஆனால், முன்னெப்போதும் இல்லாத வகையில் ஆசிரியர்கள் மட்டுமின்றி சமூக அக்கறையுடைய எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், கற்றல் முறையில் ஆக்கபூர்வமான பரிசோதனைகளை மேற்கொண்டவர்கள் எனப் பலதரப் பட்டவர்கள் பாடநூல்கள் உருவாக்கத்தில் பங்கேற்றனர். புத்தகங்களில் பலரும் புகுத்த நினைத்த புதுமைகளை ஓர் அளவுக்கு மேல் புகுத்த முடியவில்லை. பல ஆண்டு களாக மாறாத தன்மையுடனும், கற்றல் முறையில் பெரிய மாற்றங்களைச் செய்யாமலும் கற்பித்துவரப்பட்டவற்றில் மாற்றங்களைக் கொண்டுவருவது என்பது அத்தனை எளிதல்ல. மேலும், எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதையும் செய்து பார்த்துத்தான் கற்றுக்கொள்ள முடியுமே தவிர, முன்கூட்டியே அல்ல. தொடர்ந்து பள்ளிக்கல்விகுறித்த விவாதங்கள் தமிழ்நாட்டில் போதுமான அளவுக்கு நடைபெறாததும் இந்தப் பரிசோதனை முயற்சியின் தன்மையை பாதித்தது எனலாம். அடுத்து, ஆசிரியர் பயிற்சிக்கான கல்லூரிகளும் நிறுவனங்களும் ஆயிரம் இருந்தும் கற்றல் முறையைப் பற்றி ஆக்கபூர்வமாக எதுவும் செய்யப்படாமல் இருப்பதும், இந்தப் பயிற்சி மையங்கள் லாப நோக்கத்துக்காக மட்டும் நடத்தப்படுவதும், இத்தகைய புதிய முயற்சிகளின் வீச்சையும் ஆழத்தையும் கட்டுப்படுத்திவிடுகின்றன.

இருப்பினும் இதுவரை இருந்துவந்துள்ள பாடநூல் களுடன் ஒப்பிடும்போது, சமச்சீர்க் கல்வித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட நூல்கள் மேம்பட்டவையாக உள்ளன என்பதே உண்மை. அவற்றில் உள்ள நிறை, குறைகள் ஒருபுறமிருக்க, அவற்றை மேலும் சீர்ப்படுத்துவதும், அத்தகைய சீர்ப்படுத்துதலை மெட்ரிக் பள்ளி வல்லுநர்கள் சொல்வதைக் கொண்டு மட்டும் தீர்மானிக்காமல், வேறு அளவுகோல்களைக் கொண்டு யோசிப்பதும் அவசியம்.

## மெட்ரிக் பாடத்திட்டம் பற்றிப் பேசலாமா ?

மெட்ரிக் பள்ளிகள் பயன்படுத்திவந்துள்ள பாட திட்டங்களைப் பற்றிய ஆய்வும் நமக்குத் தேவை. இத்தகைய ஆய்வுக்கான வெள்ளோட்டமாக ஐந்து ஆண்டுகளுக்கு முன் நிரன்தர் என்ற ஆய்வு மையம் தமிழகம், மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், குஜராத், டெல்லி அகிய மாநிலங்களில் பயன்படுத்தப்பட்டுவரும்

வகுப்பு 1–10 வரைக்குமான சமூகவியல் பாடநூல்களையும் மொழிப் பாடநூல்களையும் (ஆங்கிலத்தையும், அந்தந்த மாநிலத்துக்குரிய மொழிகளைக் கற்பிக்கும் நூல்களையும்) மிக ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தியது. அரசுப் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் நூல்களும், தனியார் பள்ளிகள் பயன்படுத்தும் நூல்களும் என தமிழ்நாட்டிலிருந்து 36 பாடநூல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மெட்ரிக் பள்ளிகளில் அன்று பயன்படுத்தப்பட்டுவந்த பல பாடநூல்களும் இதில் அடங்கும். தமிழ்நாட்டைச் சேர்ந்த, ஆங்கிலமும் தமிழும் தெரிந்த, கல்விப் புலத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட வல்லுநர்கள்தான் இந்த ஆய்வைச் செய்தனர்.

தனியார் பள்ளிகள் பயன்படுத்தும் பாடநூல்கள் முன்வைக்கும் சமுதாயப் பார்வை, ஆங்கிலம் என்பதை ஒரு மொழியாகக் கற்பிக்காமல் வாழ்க்கை முறையாக, வர்க்க, சாதி அடையாளத்துக்கான குறியீடாகக் கற்பிக்கும் முறைமை, சமூகவியல் பாடங்களில், குறிப்பாக வரலாறுபற்றிய பாடங்களில் காணப்படும் பழமையான, தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டுவரும் அதே புளித்துப்போன விவரங்கள், புவியியல் பாடங்களை எழுதியவர்கள் இணையத்திலிருந்து அப்படியே தகவல்களை இறக்கி, நமது சூழலுக்குச் சற்றும் பொருத்தமற்ற விஷயங்களைப் பாடங்களாக வழங்கியது – முக்கியமான பாடநூல் பதிப்பாளர்களின் நூல்களும் சரி, பாடநூல் தயாரிப்பை வியாபாரமாக மட்டும் காணும் பதிப்பாளர்களின் நூல்களும் சரி, இந்த இரண்டு வகை நூல்களும் இப்படித்தான் இருந்ததை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### சி.பி.எஸ்.சி. பாடத்திட்ட ஒப்பீடு சரியா ?

சி.பி.எஸ்.சி. பாடநூல்களுடன் சமச்சீர்ப் பாடத்திட்டத்தை ஒப்பிட்டுப் பேசும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒன்றை மறந்துவிடுகிறார்கள் – அந்த நூல்கள் இவர்கள் விரும்பும் தரத்தையோ, இவர்கள் பயிற்றுவிக்க விரும்பும் போட்டிக்கான கல்வியையோ முன்னிட்டுத் தயாரிக்கப்பட்டவை அல்ல. மாறாக, ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த மாணவர்களின் வாழ்க்கை நிலைகள், சாதியாலும், பொருளாதார, சமய, பிராந்திய வேறுபாடுகளாலும் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் தற்காலச் சமுதாயத்தின் பல்வேறு கூறுகள் ஆகியவற்றை அக்கறையோடும், அதே சமயம் கறாராகவும் பதிவுசெய்யும் பாடங்கள் தேவை என்ற அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டன. குறிப்பாக, கடந்த 20 ஆண்டுகளாக, இத்தகைய விஷயங்களைத் தமது எழுத்துகளில் பதிவுசெய்துவரும் தலித் சமுதாயத்தினர், பெண்கள், பழங்குடியினர் ஆகியோரின் புரிதல்களை உள்வாங்கிக்கொண்டு பாடத்திட்டம் அமைய வேண்டும் என்ற அக்கறையிலும்தான் தற்போது அமலில் இருக்கும் சி.பி.எஸ்.சி. பாடநூல்கள், அதாவது, என்.சி.ஆர்.டி. தயாரித்துள்ள நூல்கள் அமைந்துள்ளன. தனியார் நடத்தும் பதிப்பகங்கள் என்.சி.ஆர்.டி. வல்லுநர்கள் செய்த வேலையில் ஒரு பங்குகூடச் செய்யாமல், அவற்றை அடியொற்றி, அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு அவசரஅவசரமாகப் பாடநூல்களைத் தயாரித்தனர் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. என்.சி.ஆர்.டி. நூல்களையும் தனியார் பதிப்பகங்களின் நூல்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு இது உடனடியாக விளங்கிவிடும்.

### உண்மையான தரம் எது ?

எனவே, சமச்சீர்க் கல்வியின் தரத்தைப் பற்றிப் பேசுவோர், தரம் என்று எதைக் கூறுகிறார்கள் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. ஏழை, கிராமப்புறக் குழந்தைகளுக்குரிய கல்வி தங்களுக்குப் போதுமானதல்ல என்ற இவர்களின் கூற்று இவர்களது மேட்டுக்குடி மனநிலையைக் காட்டுகிறது. எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரியான கல்வியைப் பயில வேண்டும் என்பதல்ல நாம் சொல்லவருவது. குழந்தைகளின் வாழ்நிலைச் சூழலுக்கு ஏற்ப வகுப்பறைகளை அமைத்து, அச்சூழலுக்குரிய பிரச்சினைகளைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, வளமான கற்பித்தல் முறைகளைக் கையாண்டு, குழந்தைகளைச் சிந்திக்க வைக்கும் கல்வியையும் அவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் கல்வியையும் நாம் வளர்த்தெடுக்க வேண்டும். எல்லோருக்கும் பொதுவான கட்டணமும், மரியாதையும், சாதி வேறுபாடுகளையும் பாகுபாடுகளையும் வெல்லும் பொதுமையும் பள்ளிகளில் இருப்பதுதான் சமச்சீர்க் கல்விக்கான பண்புக் கூறுகளாக இருக்க முடியும். கூடவே, ஆசிரியர்கள் எல்லாச் சமுதாயங்களையும் சேர்ந்தவர்களாக இருப்பதும் முக்கியம். அதுபோல, கல்வியை நிர்வகிக்கும் அலுவலர்கள் சமச்சீர் என்பதன் தன்மையை உணர்ந்தவர்களாக இருத்தலும் அவசியம்.

கல்விப் புலத்தில் பல போக்குகள் இருப்பது நல்லது தான். பல பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்வதும் முக்கியம். ஆனால், இவற்றை மேற்கொள்வோர், காலம்காலமாகக் கல்வி மறுக்கப்பட்டுவந்துள்ள மாணவர்களின் நலனை, போனால் போகிறது என்ற அலட்சிய மனநிலையுடன் போகிற போக்கில் அணுகினால் எத்தனை சிறப்பான கற்பித்தல் முறை என்றாலும் அதற்குப் பயனில்லாமல் போய்விடும். பன்மைத்துவம் என்ற பெயரில் மறுபடியும் சாதி ஆதிக்கமும் அறிவாளர்களின் அதிகாரமும்தான் எஞ்சி நிற்கும்.

**ஆதாரம்: தமிழ் இந்து, 04.07.2014**

# கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடத்தப்பட்டு வந்த குழந்தைகள் காப்பகத்தில் 2 சிறுமிகள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டது குறித்த உண்மையறியும் குழுவினரின் அறிக்கை

## சில முக்கிய பகுதிகள்

**முன்னுரை:**

பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் நிகழ்வு நாள்தோறும் நாளேடுகளில் வரும் தினச்செய்தியாகிவிட்ட இன்றைய சூழலில், இதன் மற்றொரு தொடர்ச்சிதான் கோவை மாவட்டத்திற்குட்பட்ட பொள்ளாச்சியில் இரண்டு சிறுமிகள் மீது நடத்தப்பட்ட பாலியல் வன்கொடுமை! இங்கு தமிழ்நாடு இவான்ஜலின் லூத்திரன் சபை எனும் தனியார் அமைப்பு, ஒரு குழந்தைகளுக்கான ஆரம்பப்பள்ளியும் அதனுடன் சேர்ந்த விடுதியும் நடத்தி வருகின்றது. இங்குள்ள விடுதியில் தங்கியிருந்த இரண்டு சிறுமிகளை 11ம் தேதி ஜூன் 2014 அன்று சில மர்ம நபர்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய செய்தி 12 மற்றும் 13ம் தேதி ஜூன் 2014 அன்று நாளேடுகளில் வெளிவந்தன. இதனைத் தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கவும், விசாரணையை மேற்கொள்ளவும் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பின் சார்பாக உண்மை அறியும் குழு சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்த அறிக்கை பின்வருமாறு.

கள ஆய்வு செய்த நாட்கள்: 17.06.2014 & 18.06.2014

கள ஆய்வு செய்த நபர்கள்:

1. **V. இந்திரா** – இணை அமைப்பாளர், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பின்
2. **S. பழனியம்மாள்** – ஒருங்கிணைப்பாளர், மக்கள் கண்காணிப்பகம்
3. **S. விஜயசங்கர்** – வழக்கறிஞர், HRARF
4. **ஆறுசாமி** – CSED
5. **R. பழனிச்சாமி** – மாவட்ட மனித உரிமை பாதுகாவலர், SASY
6. **A. ஜான்சி ஜெயராணி** – HRARF, ஒருங்கிணைப்பாளர்.

விசாரிக்கப்பட்ட நபர்கள்: **திரு. டேனியல், (TELC கோயிலின் உறுப்பினர்களில் ஒருவர்), திரு.ஜேம்ஸ் ஜெயபாலன், (TELC கோயிலின் உறுப்பினர்களில் ஒருவர்), திருமதி. செல்வி (திலகவதியின் சித்தி), திருமதி. ஜானகி (மகாலக்ஷ்மியின் சித்தி), திரு. மணிகண்டன் (திலகவதியின் தந்தை), திரு.சரவணகுமார்** (மகாலக்ஷ்மியின் தந்தை), **திரு.பிரபு (**TELC திருசபை நலச்சங்கத்தின் செயலாளர்). அரசு அலுவலர்கள்: **திருமிகு. ரஷ்மி சித்தார்த் ஜெகடே (இணை ஆட்சியர்), திருமிகு. முத்துராஜ் (மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் –பொள்ளாச்சி சரகம்), திருமிகு. அருளாதேவி (அரசு மருத்துவமனை, பொள்ளாச்சி), திருமிகு.அர்ச்சனா பட்நாயக் (மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்), திருமிகு. ஷெரின் பிலிப் (சமூக நல அலுவலர், கோயம்புத்தூர்), திருமிகு. ரெக்சீனா (குழந்தைகள் நலத்துறை அலுவலர்), திருமிகு. அர்ச்சனா பட்நாயக் (மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்), திருமிகு. கணபதி வள்ளி (உதவி AEEO), திருமிகு.செந்தில்குமார் (Prohibition Officer),** TELC **விடுதி மாணவர்கள் ஹரிஷ், ராஜ், பிரகாஷ்,** (அறிக்கைக்காக பெயர் மாற்றப்பட்டுள்ளது).

**சம்பவச் சுருக்கம்:**

பொள்ளாச்சி பழைய பேருந்து நிலையத்திற்கு எதிரே டி.இ.எல்.சி. உலக ரட்சகர் தேவாலயம் உள்ளது. இதன் வளாகத்தின் உள்ளே 50 அடித் தொலைவில் தமிழ்நாடு இவான்ஜலின் லூத்திரன் சபையினரால் (T.E.L.C) நடத்தப்படும் மாணவர்களுக்கான விடுதி அமைந்துள்ளது. இந்த விடுதியைச் சுற்றிலும் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவிற்கு இடிபாடுகளுடன் கூடிய பழைய கட்டிடங்கள் மற்றும் புதர்கள் அதிகமாக உள்ளன. இங்கே சர்வோதய சங்கக் கட்டிடம் ஒன்றும் செயல்படுகின்றது. அந்தக் கட்டிடத்தின் படிக்கட்டுகள், மாணவர் இல்லத்திற்குச் செல்லும் சந்தின் முன்புறம் இடிபாடுகளுடன் காட்சியளிக்கிறது. அக்கட்டிடத்தின் படிக்கட்டு வழியாக மேலே ஏறினால் சர்வோதயா சங்கத்தின் பெரிய மொட்டை மாடி இருக்கிறது. மாணவர்கள் விடுதியைச் சுற்றியுள்ள இடங்களில் புதர்களும் மதுபாட்டில்களும் சிதறிக் கிடக்கின்றன. பகலிலேயே இந்த இடம் மது அருந்துபவர்களுக்கு அடைக்கலமாக விளங்குகிறது.

**மேலும் இந்த விடுதியில் சரியான உள்கட்டமைப்பு வசதியும் இல்லை. பெண் மற்றும் ஆண் குழந்தைகளுக்கென தனித்தனி விடுதி அறைகளோ, சரியான கழிப்பிட வசதியோ இல்லை. மாணவர்கள்**

**திறந்த வெளியிலேயே இயற்கை உபாதைகளைக் கழிக்க வேண்டியுள்ளது. பெண் காப்பாளர் யாரும் நியமிக்கப்படவில்லை. குடிநீர் வசதியும் இல்லை. இங்குள்ள பல கட்டிடங்கள் இடிந்து, புதர்ச்செடிகள் மண்டிக் கிடக்கின்றன. மேலும் விடுதியைச் சுற்றி சுற்றுச்சுவரோ, பாதுகாவலரோ எவருமே இல்லை. இதனால் சமூக விரோதிகள் எளிதில் விடுதிக்குள் நுழைந்துவிட அதிக வாய்ப்புள்ளது. மேலும் குழந்தைகளுக்கு சரியான உணவும் இங்கு வழங்கப்படுவதில்லை.** இந்நிலையில்தான் விடுதியில் 17 மாணவர்களும் 3 மாணவிகளும் தங்கிப் படித்து வருகிறார்கள். இந்த விடுதியில் பெரும்பாலும் பெற்றோர் இல்லாதவர்கள், பெற்றோர்களால் படிக்கவைக்க **முடியாதவர்கள், மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில் உள்ளவர்கள் போன்ற குழந்தைகள்தான் தங்கியுள்ளனர்.**

சம்பவம் நடந்த 11.06.2014 அன்று இரவு சுமார் 11.45 மணியளவில் மாணவ மாணவிகள் உறங்கி கொண்டிருந்த போது விடுதியில் தங்கியிருந்த மஹாலக்ஷ்மி (10), திலகவதி (11) ஆகிய இரண்டு மாணவிகளை மர்ம மனிதர் கத்தி முனையைக் காட்டி மிரட்டி கடத்திச் சென்று கொடூரமாக பாலியல் வன்புணர்ச்சி செய்துள்ளார். மாணவிகளைக் கத்திமுனையில் கடத்திய சம்பவம் அன்று இரவே காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டு அவர்கள் மாணவிகளை மீட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், குற்றவாளிகளைத் தேடுவதற்கு தனிப்படை அமைக்கப்பட்டு தற்போது வீராசாமி என்ற குற்றவாளி கைது செய்யப்பட்டு கோயம்புத்தூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும் மாணவர்களின் விடுதி நிர்வாகிகள் மீது வழக்குப் பதிவு செய்து விடுதிக் காப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் விடுதிக்கு சீலும் வைக்கப்பட்டுள்ளது.

**டேனியல் (TELC கோவிலின் உறுப்பினர்களில் ஒருவர்):**

நான் இந்த இவான்ஜலின் லூத்திரன் கோயிலில் ஒரு உறுப்பினராக உள்ளேன். TELC நிர்வாகத்தைச் சேர்ந்த இந்த காப்பகம் 1984லிருந்து இயங்கிக்கொண்டு வருகிறது. அப்பொழுது பதிவு செய்யப்பட்டு பிறகு 1994ல் இழுத்து மூடப்பட்டது. அதன்பின் அதை புதுப்பிக்க இயலாமல் அப்படியே பழுதடைந்துகொண்டு இருந்தது. பிறகு மீண்டும் சில குழந்தைகளை வைத்து TELC கோயிலிலிருந்து வருகின்ற காணிக்கை பணத்தை வைத்து குழந்தைகள் காப்பகம் நடத்தி வந்தனர். இந்த ஆண்டு 20 குழந்தைகள் மட்டுமே உள்ளனர். இவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குழந்தைகள். இவர்கள் இங்கு தங்கிப் படிப்பதற்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதில்லை. இங்கு இருக்கிற TELC கோவில் உறுப்பினர்கள் சிலர் சொல்லியும் இந்த விடுதி பாதுகாப்பற்ற முறையில் நடத்தப்படுகிறது. இங்கு சமூக விரோதிகள் மற்றும் விஷப்பூச்சிகள் வருவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. இங்கு உள்ள கட்டிடங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் கழிவறைகள் பழுதடைந்து பாதுகாப்பற்று சீர்கேடான முறையில் இருக்கின்றன.

இந்த நிலையில் ஒரு நாள் இமானுவேல் என்பவர் தன்னுடைய மகன் பிறந்த நாளை முன்னிட்டு TELC விடுதியில் தங்கும் சிறுவர்களுக்கு உணவு வழங்கச் செல்லும்போது ஒரு குழந்தை 9 மணியளவில் பேருந்து நிலையத்தில் உள்ள ஒரு உணவகத்தில் எஞ்சியுள்ள உணவினை வாங்கிக்கொண்டு வந்ததைப் பார்த்திருக்கிறார். ஏற்கனவே இங்கு தங்கிப் படித்த ஒரு மாணவன் அதை வீடியோ எடுத்து அந்த விடுதியைப் பற்றி மாவட்ட அலுவலருக்கு ஒரு மனு அனுப்பி இருந்தான். அதற்கான எந்த நடவடிக்கயையும் இதுவரையிலும் எடுக்கப்படவில்லை. கோயிலில் காணிக்கையாக வருகின்ற பணத்தை வைத்துகொண்டு இவர்கள் ஏமாற்றி சாப்பிடுகின்றார்கள். ஆனால் விடுதியில் தங்கும் குழந்தைகளுக்கு எந்தவித வசதிகளும் செய்து தருவதில்லை. இவை அனைத்திற்கும் காரணம் விடுதி நிர்வாகி பாக்கியநாதன், விடுதியின் காப்பாளர் ராஜேந்திரன், சுரேஷ்குமார், ஜவஹர் நேரு மற்றும் விடுதியின் பாதுகாப்பாளர் ஏசுதாஸ் ஆகியோர் ஆவார்கள். அனைவரும் விடுதியைப்பற்றியோ அங்குள்ள குழந்தைகளைப்பற்றியோ எவ்விதமான அக்கறையும் இல்லாமல் நிர்வாகத்தை நடத்தி வந்துள்ளனர். இந்த சமயத்தில்தான் 8ஆம் தேதி திங்கட்கிழமை குழந்தைகளை வீராசாமி என்பவன் கொடுமையான பாலியல் தொல்லைக்கு வற்புறுத்தியிருக்கிறான். இவன் இந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்போதும், வரும்போதும் வழியில் பார்த்து, தொடர்ந்து சென்று சிறுமிகளை சில நாட்களாகவே பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்தியிருக்கிறான். இதைப்பற்றி குழந்தைகளும் விடுதிக் காப்பாளர் சுரேஷ்குமாரிடம் புகார் அளித்து இருக்கின்றனர். ஆனால் அவர்கள் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனைத் தொடர்ந்துதான் புதன்கிழமை இரவு குழந்தைகளைத் தூக்கிச் சென்று எதிரில் உள்ள முட்புதரின் ஓரத்தில் பாழடைந்த கட்டிடத்தின் அருகில் உள்ள ஒரு வணிக வளாக மாடியில் பாலியல் பலாத்காரம் செய்து இருக்கிறான். இவை அனைத்திற்கும் முக்கியக் காரணம் TELC நிறுவனத்தைச் சார்ந்த அனைத்து நிர்வாகிகளுமே!

**ஹரிஷ்** (பெயர் மாற்றப்பட்டுள்ளது) **(சம்பவ சாட்சி) :**

என் பெயர் ஹரிஷ், வயது 14. எங்கள் அம்மா அப்பா இருவரும் என்னையும் என் தம்பிகள் இரண்டு பேரையும் 11.06.2014 புதன்கிழமை அன்று பொள்ளாச்சியில் உள்ள பள்ளிகளில் சேர்த்து விட்டார்கள். அன்று இரவு நாங்கள் TELC ஹாஸ்டலில் 17 மாணவர்களும், 3 மாணவிகளும் தங்கினோம். இரவு சுமார் 11.30 மணியிருக்கும், ஒரு திருடன் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்தான். ஒருவன் தலையில் வெள்ளை முடியுடன் வெளியில் காவலுக்கு உட்கார்ந்திருந்தான். உடனே நானும் என் தம்பிகள் இருவரும், ஒரு பையனும் சேர்ந்து திருடன்... திருடன்... அய்யோ அம்மா என்று கத்தி சத்தம் போட்டோம். அவர்கள் கத்தி, பிளேடு வைத்திருந்தார்கள். உள்ளே வந்தவன் காது குத்தியிருந்தான். நாங்கள் சத்தம் போட்டதைப் பார்த்து சத்தம் போட்டீங்க... சொருகிடுவேன் என்று மிரட்டினான். என் ரெண்டு தம்பிகளை பின்புறத்தில் அடித்தான். நான் பயந்து கீழே படுத்துக்கொண்டு பார்த்தேன். அவன் ரெண்டு பெண் பிள்ளைகளையும் அடித்து இழுத்துக் கொண்டு அருகில் உள்ள மொட்டை மாடிக்கு தூக்கிக்கொண்டு போனான். நான் ஜன்னல் வழியே பார்த்தேன். உடனே நானும் விமல் என்ற பையனும் வார்டன் வீட்டிற்குச் சென்று இரண்டு திருடர்கள் புகுந்து ரெண்டு பெண் பிள்ளைங்களை மொட்டை மாடிக்கு தூக்கிக்கொண்டு ரெண்டு பேர் போறாங்க என்று சொன்னோம். உடனே வார்டன் HMக்கு போன் போட்டுச் சொன்னார். HM வந்து போலீசுக்கு போன் செய்து திருடன் புகுந்து ரெண்டு புள்ளைங்களை தூக்கிக்கொண்டு போய்விட்டான் என்று கூறினார்கள். எங்களை வாட்ச்மேன் மற்றும் பெரிய அக்காள்கள் ரெண்டு பேர் உள்ளே வைத்து எதுவும் பேசக்கூடாது என்று சொல்லி விட்டார்கள், முதலில் ரெண்டு போலீஸார்கள் வந்தார்கள். பிறகு நிறைய போலீஸார்கள் வந்துவிட்டார்கள். வெகு நேரம் கழித்து சுமார் 3.30 மணியிருக்கும் ரெண்டு போலீஸார்கள் வந்து மொட்டை மாடிக்குச் சென்று அங்கிருந்த ரெண்டு பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு வந்தார்கள்.

அவர்கள் ரெண்டு பேரும் மயக்கத்தில் இருந்தார்கள். அதில் ஒரு பிள்ளைக்கு வாய் பெரியதாக வீங்கியும் அதிலிருந்து ரத்தமும் வந்துகொண்டிருந்தது. கழுத்து, நெத்தியில் காயங்கள் இருந்தது. என்னை மட்டும் போலீசார்கள் விசாரித்தார்கள். நான் ரெண்டு பேரில் ஒருவன் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்து ரெண்டு புள்ளைங்களை தூக்கிக்கொண்டு போனான். வெளியில் காவலுக்கு இருந்த மற்றொருவனும், மொட்டை மாடிக்கு பின்னாடியே சென்றான் என்று சொன்னேன். பிறகு என்னை போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போய் ஒரு மிஸ் (பெண் போலீஸ்) விசாரித்தார்கள். நான் நடந்தவற்றை அப்படியே சொன்னேன். வியாழக்கிழமை சாயங்காலம் அன்பு இல்லத்தில் கொண்டு வந்து விட்டார்கள். அங்கு ஒரு பெரிய போலீஸ் அதிகாரி வந்து விசாரித்தார். நான் அவரிடம் ரெண்டு பேரில் ஒருவன் வெளியே காவலுக்கு நின்று கொண்டான். ஒருவன் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்து எங்களைக் கத்தியைக் காட்டி சத்தம் போட்டால் சொருகிவிடுவேன் என்று மிரட்டிவிட்டு ரெண்டு புள்ளைங்களை அடித்து இழுத்துக்கொண்டு அருகில் இருக்கும் மொட்டை மாடிக்கு தூக்கிக்கொண்டு போனார்கள் என்று சொன்னேன். செவ்வாய்கிழமை அன்பு இல்லத்திற்கு எங்கள் அப்பா, அம்மா வந்து TC–யைக் காட்டி இங்கு (வீட்டிற்கு) அழைத்து வந்து பள்ளிப்பாளையத்தில் சேர்த்துவிட்டார்கள். நேற்று (20.6.2014) என்னை உக்கடம் கோர்ட்டுக்கு கொண்டு போய் வாட்ச்மேன், துணி வியாபாரியுடன் என்னை நிற்கவைத்துவிட்டு ஒரு நீதிபதி அய்யா குற்றவாளிகளை அடையாளம் காண்பிக்க சொன்னார். கையை நீட்டாமல் அடையாளம் காட்டினேன். அன்றைக்கு வந்த திருடனை எனக்கு நன்கு அடையாளம் தெரிந்தது. அவனை மூன்று முறை மாறி மாறி நிற்கவைத்து அடையாளம் காட்டச் சொன்னார்கள். நான் மூன்று முறையும் நன்றாக அடையாளம் காட்டினேன். வாட்ச்மேனும், துணி வியாபாரியும் முதல் தடவை குழம்பிப் போய்விட்டார்கள். பிறகு ரெண்டு தடவை நன்றாக அடையாளம் காட்டினார்கள். எனக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்து வீட்டில் கொண்டு வந்து போலீசார் விட்டுவிட்டு சென்று விட்டார்கள்.

**ராஜ்** (பெயர் மாற்றப்பட்டுள்ளது) (பாதிக்கப்பட்ட திலகவதியின் தம்பி)

நாங்க திங்கட்கிழமை (10.06.2014) அன்றைக்கு இரவு எல்லாரும் ஒரே ரூமில்தான் படுத்திருந்தோம். அப்ப நான் எங்க அக்கா பக்கத்தில்தான் படுத்திருந்தேன். அப்போது ஒரு அண்ணன் வந்து கதவை தட்டினார். அப்புறம் அக்கா வந்து கதவை திறந்தாங்க. அக்கா அழுதுகிட்டு இருந்தாங்க. அதன் பிறகு எங்க அக்காவ அந்த அண்ணன் அழைச்சிகிட்டு போயிட்டாரு. நாங்க அப்பவே சின்ன வார்டன்கிட்ட சொன்னோம். அவரு வாட்சுமேனை படுக்கச் சொல்றேன் என்று சொன்னாரு. அதன் பிறகு கொஞ்ச நேரம் கழிச்சி அக்கா வந்தாங்க. அதன் பிறகு 11.06.2014 அன்னைக்கு சரியா நேரம் தெரியல, ஒருத்தரு இருட்டா இருக்கிற சமயம் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாங்க, நாங்க பயந்துட்டோம். அப்ப கதவ பலமா தட்டியதில் கதவு தானா திறந்துகிச்சி. திங்கட்கிழமை வந்த அதே அண்ணன் இன்னைக்கும் வந்திருந்தார். அப்ப எங்களோடு இருந்த சில பெரிய அண்ணன்கள் எழுந்தாங்க. அப்ப அந்த அண்ணன் அவங்களை கன்னத்தில அறைஞ்சி படுக்க சொல்லிவிட்டு திலகா அக்காவையும், மகாலட்சுமியும் கத்தியை காட்டி அழைச்சிகிட்டு போனாரு. அப்ப ஏற்கனவே அவரோடு வந்த ஒரு அண்ணன் இல்லத்தோட வாசல்கிட்ட நின்னுகிட்டு இருந்தாரு. அவரும் சேர்ந்துகிட்டு இரண்டு அக்காவையும் அழைச்சிகிட்டு போனாங்க. இது

சம்பந்தமா நாங்க சின்ன வார்டன் அவருகிட்ட சொன்னோம். அவரு உடனே தலைமை ஆசிரியருகிட்ட போன் செஞ்சி சொன்னார். அவர் வந்ததும் எல்லோரும் சேர்ந்து தேடினோம். அப்ப பக்கத்து மாடியில இரண்டு பேரு எங்களை பார்த்ததும் கீழே குதிச்சி ஓடினாங்க. வார்டன் தடிய வச்சி அடிச்சதில ஒரு அண்ணனுக்கு தலையில காயம் ஏற்பட்டிருக்கு. அப்புறமா அங்கிருந்த ஆட்டோகாரர்தான் மாடியில இருந்த அக்காக்கள கண்டுபிடிச்சி, அவரு ஆட்டோவில தூக்கி வச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்க.

**திரு.மணிகண்டன் (திலகவதியின் தந்தை)**

நான் பத்ரகாளியம்மன் கோவில் தெரு, சுந்தரபுரி காலனி, தாத்தூர் ஊராட்சி, ஆனைமலை ஒன்றியம் கோயம்புத்தூர் மாவட்டம் என்ற முகவரியில் மனைவி செல்வியுடன் வசித்து வருகிறேன். நான் ஏறாவாலன் என்ற மலைசாதி வகுப்பைச் சேர்ந்தவன். விவசாய கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வருகின்றேன். என் மனைவி செல்வி, தேவர் சமூகத்தைச் சேர்ந்தவள். திலகவதியின் தாயார் நான் தற்போது திருமணம் செய்துள்ள செல்வியின் அக்கா நாகமணி ஆகும். திலகவதி பிறந்த 8 மாதத்திலேயே நாகமணி மஞ்சக்காமாலை நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார். நாங்கள்தான் திலகவதியை எடுத்து வளர்த்து வந்தோம். திலகவதியின் அப்பா பச்சமுத்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் தற்போது எங்கு உள்ளார் என்றே தெரியவில்லை.

நாங்கள் திலகவதியை பொள்ளாச்சியில் உள்ள TELC மாணவர் இல்லத்தில் படிப்பதற்காகச் சேர்த்தோம். இப்பொழுது அவள் 6 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறாள். எங்களுக்கு மோகன்ராஜ்என்கின்ற 10 வயது மகனும் உள்ளான். TELC மாணவர் இல்லத்தில் தங்கிப் படித்து வருகின்றான். அதோடு புஷ்பாஞ்சலி என்கிற 8 வயது மகள் இருக்கிறாள். இவளும் மற்றொரு TELC மாணவர் இல்லத்தில் தங்கி படித்து வருகிறாள். திலகவதியுடைய பாட்டி ராணி சின்ன நேகமத்தில் வசிக்கிறார். இவர் மட்டை மில்லில் வேலை செய்து வருகிறார். திலகவதி விடுப்பில் தனது பாட்டி வீட்டிற்குச் சென்று வருவாள். சம்பவம் நடந்த அன்று (11.06.2014) திலகவதியை இரவு மர்ம நபர் விடுதிக்குள் நுழைந்து அழைத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்தது குறித்து என்னிடம் யாரும் சொல்லவில்லை. மறுநாள் 12.06.2014 அன்று மாலை சரவணனுடைய மகன் விடுதியில் இருந்து வந்து திலகவதியையும், மகாலட்சுமியையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். இப்பொழுது அவர்களது உடல்நிலை சரியில்லை, அவர்களை பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர் என்று கூறினான். உடனே நானும், எனது மனைவியும் நேராக மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். திலகவதி மற்றும் மகாலட்சுமி ஆகிய இருவரையும் குழந்தைகள் வார்டில் சேர்த்திருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்துவிட்டு வெளியே வந்துவிட்டேன். என் மனைவி மட்டும் உள்ளே இருந்தாள். அதன் பிறகு அரசு அதிகாரிகள் வருகிறார்கள் என்று யாரையும் உள்ளே விடவில்லை. குழந்தைகள் மிகவும் மோசமான நிலையில் இருந்ததால் குழந்தைகளுக்கு குளுகோஸ் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். இதுகுறித்து குழந்தைகளிடம் விசாரித்தபோது ஜன் 11ம் தேதி அன்று இரவு என் பெண்ணையும் மகாலட்சுமி என்ற பெண்ணையும் கடத்தி பலவந்தம் செய்துள்ளார்கள் என்று கூறினர். நாங்களும் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று ஆர்பாட்டம் செய்தோம். ஆனால் ஒரே ஒரு குற்றவாளியை மட்டும் கைது செய்தார்கள். நாங்கள் வறுமையின் காணமாகத்தான் விடுதியில் சேர்த்தோம். அங்கும் பாதுகாப்பு இல்லாமல் இவ்விதமான அசம்பாவிதம் நடந்துள்ளது. எனவே எனது குழந்தையை இந்த நிலைக்கு ஆளாக்கிய குற்றவாளிகளைத் தூக்கில் போடவேண்டும்.

**ரஷ்மி சித்தார்த் ஜெகடே (இணை ஆட்சியர் – பொள்ளாச்சி கோட்டம்) :**

TELC விடுதி சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள மகாலட்சுமி, திலகவதி ஆகிய இரண்டு குழந்தைகளுக்கும் முறையான மருத்துவ வசதி செய்யப்பட்டு வருகின்றது. போதுமான காவலர்கள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். கல்வித்துறை, சமூகநலத்துறை, குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் உட்பட அனைவரும் தொடர்ந்து பணியில் உள்ளனர். குழந்தைகளை உளவியல் ரீதியாக ஆற்றுபடுத்திட அதற்கான கவுன்சிலர் வரவழைக்கப்பட்டுள்ளனர். விடுதி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்சமயம் விடுதி பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டதால் குழந்தைகளுக்கு தலா ரூ. 3 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளிகள் விரைவாக கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற குழந்தைகளை கோவையில் உள்ள டான் போஸ்கோ அன்பு இல்லத்தில் சேர்த்துள்ளோம். மேற்கொண்டு தேவையான உதவிகளை பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்க உள்ளோம்.

**திரு. முத்துராஜ் (மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் பொள்ளாச்சி சரகம்) :**

12.06.2014 அன்று இரவு சுமார் 3 மணியளவில் எங்களுக்குத் தகவல் வந்தது. இரண்டு குழந்தைகளை ஒரு மர்மநபர் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டதாகக் கூறினார்கள். நாங்கள் உடனே சம்பவ இடத்திற்குச் சென்று குழந்தைகளை தேடியபோது மாணவர் இல்லத்தின் அருகில் உள்ள காம்ப்ளக்ஸ் மாடியில் குழந்தைகள் அழுது கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்று குழந்தைகளைத் தூக்கும்போது குழந்தைகளின் உடலில் ரத்தம் இருந்தது. உடனே குழந்தைகள்

இருவரையும் பொள்ளாச்சி அரசு மருத்தவமனையில் சேர்த்தோம். அதன் பிறகு அங்கிருந்த மாணவர்களை விசாரித்த போது 1.06.2014 அன்று ஒரு நபர் மாணவர் விடுதிக்கு வந்து கதவைத் தட்டி திலகவதியை அழைத்துக்கொண்டு சென்றதாகவும், பிறகு சிறிது நேரம் கழித்து திலகவதி வந்ததாகவும் கூறினார்கள். இதனைத்தொடர்ந்து மீண்டும் 11.06.2014 அன்று இரவு அதே மர்ம நபர் வந்து கதவை தட்டியுள்ளார். அப்பொழுது சிறியவர்கள் எழுந்துள்ளனர். அவர்களை அடித்து படுக்கவைத்துவிட்டு மாணவிகளின் இடையில் படுத்திருந்துவிட்டு, அதன் பிறகு இரண்டு மாணவிகளையும் அழைத்துக்கொண்டு அருகில் உள்ள காம்ப்ளக்ஸ் மாடிக்குச் சென்று வீராசாமி என்ற அந்த நபர் பாலியல் வன்புணர்ச்சி செய்துள்ளார். இது குறித்து மாணவர்கள் வார்டனிடம் கூறியுள்ளார்கள். அதன் பிறகு குழந்தைகளைத் தேடிவிட்டு பிறகு அதிகாலை 3 மணிக்கு எங்களுக்குத் தகவல் கூறினார்கள். இந்நிலையில் சந்தேகத்திற்கிடமான சிலரை விசாரணை செய்தோம். அதில் குறிப்பாக வால்பாறை கக்கன் நகரைச் சேர்ந்தவரான வீராசாமிதான் பெண் குழந்தைகளை விடுதியிலிருந்து கடத்தி பலாத்காரம் செய்துள்ளதாக விசாரணையில் அறியப்பட்டது. அதனடிப்படையில், உடுமலைப்பேட்டை அருகே புதுக்குளம் என்ற ஊரின் சுடுகாட்டில் பதுங்கி இருந்த வீராசாமி என்பவனை பொதுமக்கள் கொடுத்த தகவலைக்கொண்டு கைது செய்தோம். குழந்தைகளிடம் அவனது புகைப்படத்தைக் காட்டியபோது அவன்தான் குற்றவாளி என உறுதியானது. உடனே வீராசாமியை 16/14 U/s 5(b),(1)(m) r/w 6 of POCSO Act, 366(a), 376 IPC r/w 3(1)(w), 3(2)(v) of SC/ST (POA) Amenment ordance act ஆகிய பிரிவுகளின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்துள்ளோம். 15 நாட்களில் குற்றப்பத்திரிக்கை தயாரிக்கப்பட்டுவிடும். பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலைய கட்டுப்பாட்டுப் பகுதி மாரியம்மன் கோவில் பகுதியில் உள்ள கோமதி என்பவரிடம் வழிப்பறி செய்த வழக்கின் அடிப்படையில் இவனுடன் தொடர்பிலுள்ள 3 பேர் மீது வழக்கு 310/2014 பதிவு செய்யப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளின் நிவாரணத்திற்குத் தேவையான ஆவணங்களை விரைவாகப் பெற்றவுடன் பிற உதவிகளும் செய்யப்படும்.

### திருமிகு. அர்ச்சனா பட்நாயக் (மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்) :

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடந்த சம்பவத்திற்கு நாங்கள்தான் பொறுப்பு. காவல் துறையினர் முறையாகவும், விரைவாகவும் குற்றவாளியை கைது செய்துள்ளனர். குற்றவாளியுடன் மேலும் இருவர் வந்தது குறித்து பாதிக்கப்பட்ட மாணவிகள் கூறவில்லை. இது குறித்து நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அணுகி மேலும் விசாரணையைத் துரிதப்படுத்துமாறு கூறியுள்ளேன். தொண்டு நிறுவனங்கள் சம்பவம் நடக்கும்போது மட்டும் வராமல் அவ்வப்போது இது போன்ற சம்பவங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும்.

### திருமிகு.செந்தில்குமார் (Prohibition Officer)

நான் சென்னையில் இருந்து இப்போது பணிமாற்றம் செய்யப்பட்டு வந்திருக்கிறேன். இதைப் பற்றி நான் பலமுறை எச்சரித்து ஷோகாஸ் நோட்டீஸ் அனுப்பியுள்ளேன். ஆனால் எந்தவிதமான பதிலும் இல்லை. அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. நான் TELC இல்லத்தை நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். எந்த விதமான வசதிகளுமின்றி பாதுகாப்பற்ற சூழ்நிலையிலேயே அந்த இல்லம் நடத்தப்பட்டு வந்தது. அப்போது, காப்பகத்தை 10 நாட்களுக்குள் சரி செய்ய வேண்டும், இல்லையென்றால் தீவிர நடவடிக்கை எடுப்பேன் என்று கடுமையாக எச்சரித்துவிட்டு வந்தேன். ஆனாலும் எந்த பதிலும் இல்லை. சம்பவம் நடந்த அன்று நேரடியாக சென்று குழந்தைகளிடம் விசாரித்தேன். அப்பொழுது அவர்கள் கூறியது, "மர்ம மனிதர் ஒருவன்தான் எங்களை மிரட்டி இழுத்துச் சென்றான்" என்றனர். சிறுமிகளுக்கு நடந்த கொடுமையை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. தற்போது மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் அரசு அங்கீகாரம் பெறாத காப்பகங்கள் அனைத்தும் மூடப்பட்டு வருகின்றன.

### கண்டறிந்தவைகள்:

- கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சி தாலுகாவிலுள்ள பொள்ளாச்சி நகர் பேருந்து நிலையம் அருகில் அமைந்திருக்கும் TELC என்ற விடுதியை கடந்த 1994க்கு பிறகு அரசு அனுமதி பெறாமலேயே நடத்தி வந்துள்ளார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் 17 மாணவர்களும் 3 மாணவிகளும் ஒரே அறையில் தங்க வைத்துள்ளார்கள் என்பது கள ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இல்லம் பாழடைந்த கட்டிடங்களுக்கு நடுவில் சுற்றுச்சூழல் இல்லாமல் சமூக விரோதிகள் எளிதில் உள்ளே நுழையும் வகையில், பாதுகாப்பற்ற நிலையிலும், கழிவறைகள் சுகாதாரமற்ற முறையிலும், மத்திய உணவுக்கூடம், விறகுகள் அடுக்கிவைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.
- இல்லத்தில் உள்ள ஜன்னல்கள் உடைந்துள்ளதால் விஷ ஜந்துக்கள் எளிதாக உள்ளே செல்வதற்கான வழிகளும், இல்லத்தின் முன் பகுதி முழுவதும் புதர் நிறைந்தும்



குழந்தைகள் தங்கியிருந்த விடுதியின் சூழல்



குழந்தைகள் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்ட மேல்தளப் பகுதி



இருப்பதால் குழந்தைகளுக்கான பாதுகாப்பற்ற நிலையில் இல்லம் செயல்பட்டு வந்துள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இல்லக் காப்பாளர் இரவு நேரங்களில் தங்குவதில்லை என்பதும், மாணவிகள் இருக்கும் இடத்தில் பெண் பாதுகாவலர் இல்லாமல் இருப்பதும், இல்லம் என்ற பெயரில் மாணவ மாணவிகளை வைத்துப் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் இல்லத்தை நடத்தி வந்துள்ளனர் என்பதும் கண்டறியப்படுள்ளது.

– இல்லத்தில் தங்கியுள்ள மாணவ மாணவிகள் தங்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டுமெனில் பேருந்து நிலையம், கடைவீதிகள் நிறைந்த மிக நெரிசலான பகுதியைக் கடந்துதான் செல்ல வேண்டியுள்ளது. அப்போது சமூக விரோதிகள் மிக எளிதாக மாணவர்களை அணுகும் பாதுகாப்பற்ற நிலையே உள்ளது. மாணவர் இல்லத்தில் இரவு உணவு சமைக்காத காரணத்தால் தினந்தோறும் மாணவ மாணவிகள், பேருந்து நிலையம் அருகில் உள்ள உணவகங்களில் எஞ்சிய பழைய உணவைப் பெறுவதற்கு இரவு நேரங்களில் சென்று வந்துள்ளார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. TELC மாணவர் இல்லம் அமைந்துள்ள இடத்தைச் சுற்றி சார் ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், சார்பு நீதிமன்றம், தொடக்கக்கல்வி அலுவலகம், வட்டார வளமையம் உள்ளிட்ட பல அரசு அலுவலகங்கள் இருந்தும் இச்சம்பவம் நடந்துள்ளது என்பது அரசு அலுவலர்களின் மெத்தனப்போக்கையும், குழந்தைகள் மீது கொண்ட அக்கறையின்மையையுமே காட்டுகிறது.

– TELC மாணவர் இல்லத்தில் கடந்த 2 வருடங்களுக்கு முன், இல்லத்தில் இருந்த மாணவியிடம் இல்லப் பாதுகாவலர் ஜவஹர் ஜெயக்குமார் பாலியல் தொல்லை செய்ததாகவும், அந்த மாணவியின் பெற்றோர் தகராறு செய்தவுடன் ரூ.35,000 பணத்தைக் கொடுத்து சமரசம் செய்து வழக்கு ஆகாமல் தடுத்து, அந்த மாணவியை அவரது பெற்றோருடன் அனுப்பியுள்ளார் என்றும் தேவாலயத்தின் உறுப்பினர் டேனியல் பூரணன் அவர்களின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது. TELC மாணவர் இல்லத்தில் தங்கிப் படித்து வந்த மாணவி மகாலட்சுமி (10), திலகவதி (11) ஆகிய இரண்டு சிறுமிகளை கடந்த 11.06.2014 அன்று இரவு சுமார் 11.30 மணியளவில் மர்ம மனிதன் கத்தி முனையில் கடத்தி இல்லத்திற்கு அருகாமையில் உள்ள வணிக வளாகத்தின் மொட்டை மாடியில் வைத்துப் பாலியல் வன்புணர்ச்சி செய்துள்ளான் என்பது உண்மை என்று கண்டறியப்பட்டுள்ளது. TELC மாணவர் இல்லத்தில் மாணவிகளை மர்ம மனிதர்கள் கத்திமுனையில் கடத்திச் சென்றதை மாணவர்கள் உடனே இல்லக் காப்பாளரிடம் கூறியவுடன் இல்லக் காப்பாளர் காவலர்களை தொடர்புகொண்டு கூறியதாக பத்திரிகை செய்திகளின் அடிப்படையிலும், D.S.P.

முத்துராஜ்கூறும்பொழுது 11.06.2014 அன்று கடத்தியவர்களை காவல்துறையினர் துரத்தி வரும்பொழுது ஒருவர் விடுதிக்குச் சென்றுவிட்டதாகவும், அதன்பிறகு காப்பாளர் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் காவலர்கள் அங்கு சென்றதாகக் கூறியதிலிருந்து, விடுதிக்குள் நுழைந்த மனிதரை ஏன் காவல்துறையினர் தேடிச் செல்லவில்லை என்ற கேள்விகளிலிருந்து, DSP தனது கடமையை சரிவர செய்யாத காரணத்தினால்தான் இதுபோன்ற சம்பவம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

– TELC மாணவிகள் பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்ட பிறகு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது மஹாலட்சுமியின் பிறப்பு உறுப்பு 8 சென்டிமீட்டர் அளவிற்கு கிழிந்து உள்ளது என்றும், திலகவதி என்ற மாணவிக்கு ஏற்கனவே பலமுறை பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட காயங்கள் இருப்பது உண்மை என்பதும் இருப்பிட மருத்துவ அலுவலர் மற்றும் DSP வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது. TELC மாணவிகள் வன்புணர்ச்சி செய்யப்பட்ட வழக்கில் முதலில் கோபிநாத், ஹரி, அருண், வெங்கடேஷ் ஆகியோரை கைது செய்து பிறகு வீராச்சாமியைக் கைது செய்ததாகவும், பத்திரிகை செய்திக்குப் பிறகு வீராச்சாமி மீது மட்டும் பாலியல் வன்புணர்ச்சி வழக்கு பதியப்பட்டு, மேற்கண்ட நபர்கள் மீது வழிப்பறிக் கொள்ளை வழக்கு மட்டும் பதிவு செய்யப்பட்டதிலிருந்து மேற்கண்ட குற்றவாளிகளை தப்பிக்க வைக்கும் நோக்கத்துடன் காவல்துறையினர் செயல்படுகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

– கோயம்புத்தூர் டான்பாஸ்கோ அன்பு இல்லத்தில் உள்ள மாணவர்களின் வாக்குமூலத்தின்படி குற்றவாளி சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் திலகவதி என்ற சிறுமியை மிரட்டி மாடிக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்ச்சி செய்துள்ளது குறித்து, மாணவர்கள் வார்டன் சுரேஷ் குமார் அவர்களிடம் கூறியும் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரியவருகின்றது. இந்த TELC மாணவர் இல்லம் அரசு அனுமதி இல்லாமல் செயல்பட்டு வருவதை மாவட்ட நிர்வாகம் அறிந்திருந்தும், அதன் நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் மெத்தனப்போக்கில் இருந்ததால்தான் இது போன்ற கொடூர சம்பவம் நிகழ்ந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

**பரிந்துரைகள்:**

- TELC மாணவர் இல்லத்தில் சிறுமிகள் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்புணர்ச்சி சம்பவத்தில் ஈடுபட்ட நபருக்கு உடந்தையாக இருந்த கோபிநாத், வெங்கடேஷ், அருண் ஆகிய 3 பேரின் மீதும் Posco Actன் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று காவல்துறை இயக்குநருக்கு பரிந்துரைக்கப்படுகிறது. சிறுமிகளை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியவர்கள் மீது மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் உடனடி நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும், Posco சட்டத்தை முறையாக செயல்படுத்தவில்லை என்பதால் ஒவ்வொரு மாவட்ட நிர்வாகிகளுக்கும், மாவட்ட காவல்துறையினருக்கும், இச்சட்டம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி வழங்க வேண்டும் என தமிழக முதல்வர் அவர்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது. தமிழக அரசு இச்சம்பவத்தில் உடனடியாக பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தலா 3 லட்சம் நிவாரண நிதி வழங்கி இருந்தபோதிலும், அவர்களுக்குத் தொடர்ந்து உயர்நிலை கல்வி வழங்குவது மற்றும் அவர்களுக்கு SC-ST சட்டம், Posco சட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கி, எதிர்காலத்தில் அவர்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரைக்கப் படுகிறது.

– பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மனநல மருத்துவர்களைக் கொண்டு சரியான சிகிச்சையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். NCPCR மற்றும் SCPCR ஆணையர்களும் இந்த வழக்கில் உடனடியாக விசாரணை செய்து பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணமும், குற்றவாளிக்குக் கடுமையான தண்டனை வழங்க அரசுக்கு உத்தரவு வழங்க வேண்டுமென்று பரிந்துரைக்கிறோம். இந்த வழக்கில் தனது கடமையை செய்யத் தவறிய அனைத்து அதிகாரிகள் மீதும் துறைரீதியான நடவடிக்கை எடுக்க அரசுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. தமிழகத்தில் இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டப் பதிவு செய்யாமல் நடத்தி வரும் அனைத்து இல்லங்களும், உடனடியாக இழுத்து மூடவும், முறையாக பதிவு செய்திருக்கும் இல்லங்களை முறையாக கண்காணிக்கவும் வேண்டுமென்று அரசுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

***Supported by:* HRARF, CSED, Peoples Watch, SASY, TNCRPN**

# திண்டுக்கல் மாவட்டத்தில் பள்ளிக் குழந்தைகளை நூற்பாலைகளில் (பஞ்சு மில்கள்) உழைப்புச் சுரண்டலில் ஈடுபடுத்துவது தொடர்பான உண்மையறியும் குழு அறிக்கை 17, 18 ஜூலை 2014

**குழந்தை உழைப்பு எதிர்ப்புப் பிரச்சாரம், தமிழ்நாடு (CACL - TN)**

## சில முக்கிய பகுதிகள்



மில்களில் வேலை செய்யும் குழந்தைத் தொழிலாளர்கள்

### முன்னுரை:

திண்டுக்கல் மாவட்டம், கம்பிளியாம்பட்டி மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில், நூற்பாலைகள் மற்றும் நெசவுத் தொழிற்சாலைகள், இயங்கி வருகின்றன. பன்னாரி அம்மன் மில்லில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள், தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். தங்களது பள்ளி விடுமுறையின்போது வேலை செய்த குழந்தைகளுக்கு, போதிய ஊதியம் வழங்காமல், தொடர்ந்து தொழிற் சாலையில், வேலை செய்யும்படி தொழிற்சாலையின் நிர்வாகிகள் கட்டளை பிறப்பித்திருக்கின்றனர். இதுமட்டுமில்லாமல், தொழிற்சாலையின் விடுதியில் தங்கியிருந்த குழந்தைகளை பல மணிநேரம் வேலை செய்யக் கட்டாயப்படுத்தியிருக்கின்றனர். இந்த ஆண்டு மீண்டும் கல்வியைத் தொடர இருந்த குழந்தைகளைக் கண்டித்து, நீங்கள், தொடர்ந்து வேலைக்கு வந்தால்தான் கடந்த 2 மாத சம்பளப் பணத்தை வழங்குவோம் என்று கூறி வேலைக்கு வரச் சொல்லி கட்டாயப்–படுத்தியுள்ளனர். பன்னாரி அம்மன் மில்லில் இருந்து வேலை செய்து வந்த 22 குழந்தைகளை திண்டுக்கல் மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள், மீட்டுள்ளனர் என்பதை தின நாளிதழின் மூலம் அறிந்து TNCRPNல் குழு அமைத்து 17.07.2014 மற்றும் 18.07.2014 தேதிகளில் கள ஆய்வு செய்த உண்மை அறியும் குழுவினரின் ஆய்வு அறிக்கை.

**தமிழ்நாடு குழந்தை உழைப்பு எதிர்ப்பு பிரச்சார அமைப்பின் சார்பில் உண்மை அறியும் குழுவினர்: D. அருள் தேவராஜ்** – SIRD, **தென் பாண்டியன்** – துணை இயக்குநர், CCRD, **V. இந்திரா**, இணை அமைப்பாளர், TNCRPN, **S. விஜயசங்கர்** – வழக்கறிஞர், HRARF, **K. மூர்த்தி** – இயக்குநர், Pasumai Trust, **P. ராஜகோபால்** – தலைவர், NEEDS, **கிறிஸ்துராஜ்** – இயக்குநர், Psycho Trust, **A. ஜான்சி** – ஒருங்கிணைப்பாளர், HRARF **S. வெஸ்லி** – சமூக ஆர்வலர்.

**உண்மை அறியும் குழுவினர் சந்தித்த நபர்கள்: அறியம்மாள்,** மாணவி மற்றும் **கவிதா,** மாணவி (கொம்பேறிபட்டி உயர்நிலை பள்ளி), **ஆர். பிரபு,** மில் தொழிலாளி, **தாரணி** (18 வயது பெண்), மில் தொழிலாளி, ஸ்ரீராமபுரம், **என். மாரியம்மாள்,** கம்பிளியாம்பட்டி தொடக்கப் பள்ளி உதவி ஆசிரியை, **லதா,** தொடக்கப்பள்ளி ஆசிரியை, **சத்தியவாணி,** தலைமை ஆசிரியை, (கொம்பேறிபட்டி உயர்நிலைப் பள்ளி), **குமர ராஜு,** தலைமை ஆசிரியர் (தென்னாம்பட்டி மேல்நிலைப் பள்ளி), **வேலுச்சாமி,** சத்துணவு அமைப்பாளர், தொடக்கப்பள்ளி, கம்பிளியாம்பட்டி, **பேச்சியக்காள்,** ரமேஷின் பெரியம்மா, **பாப்பாத்தி,** கம்பிளியாம்பட்டி, **சரோஜா,** கம்பிளியாம்பட்டி, **சின்னம்மா** (69), கம்பிளியாம்பட்டி, **ராமசாமி,** தன்னார்வத் தொண்டர் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம்), **கலையரசி,** முதன்மை கல்வி அலுவலர் (CEO), **இயக்குநர், தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் (NCLP), கே. தினகரன்,** தொழிற்சாலை ஆய்வாளர், **கவிதா,** துணைத் தலைவர், பிலாத்து ஊராட்சி, **கே. பிரபாகரன்,** பொது மேலாளர், மனிதவள மேம்பாடு, பன்னாரி அம்மன் நூற்பாலை, **பாலமுருகன்,** மேலாளர் – மாதா மில், **கோபால்,** சண்முகவேல் நெசவுத் தொழிற்சாலையில்

## நூற்பாலைகளில் குழந்தைகளைப் பணியமர்த்தல் – உண்மைகள்

திண்டுக்கல் மாவட்டத்தில் பல நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில், உழைக்கும் மக்களில் 50% மக்கள் பிலாத்து ஊராட்சியிலுள்ள கம்பிளியாம்பட்டி, பாலகுறிச்சி, வாரிச்செட்டிபட்டி, மெத்தபட்டி போன்ற கிராமங்களிலிருந்தும் கொம்பேறிபட்டி பஞ்சாயத்தைச் சார்ந்த சின்னகொம்பேறிபட்டி, ஸ்ரீராமபுரம், ரெட்டிபுதூர், ஊரணியூர், மண்பனையூர், சங்கரபட்டி, சேத்துவார்பட்டி, மேல்வார்பட்டி, கண்ணம்பட்டி போன்ற கிராமங்களிலிருந்து சிவா நூற்பாலை, பன்னாரி அம்மன் ஸ்பின்னிங் மில், ஸ்ரீ மூகாம்பிகை ஸ்பின்னிங் மில், பன்னாரி அம்மன் ஸ்பின்னிங் மில், சேரன் ஸ்பின்னிங் மில், சோழா டெக்ஸ்டைல்ஸ் (பி) லிட், தரணி ஸ்பின்னிங் மில், பல்லவன் ஸ்பின்னிங் மில், ஸ்ரீ மதுரா ஸ்பின்னர்ஸ், செந்தூரன் காட்டன் இந்தியா (பி) லிமிடெட், எவரெடி ஸ்பின்னிங் மில், ஸ்ரீ வேலாயுதம் மில்ஸ், செந்தில் ஸ்பின்னர்ஸ், புவனேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் என 76 நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் வடமதுரை மற்றும் வேடசந்தூர் வட்டத்தில் உள்ளன. இந்த நூற்பாலைகளில் 13 வயதிலிருந்து பணியில் அமர்த்துவது (விடுமுறை காலங்களில்) வழக்கமானதாக இருந்து வருகிறது அல்லது நூற்பாலைகளின் தேவையை நிறைவேற்ற குழந்தைகள் பள்ளி இடை–விலகலாகின்றனர். இந்த நூற்பாலைகளில் 14 வயதுக்கு கீழும் 18 வயது வரையிலும் குழந்தைகளை வேலைக்கு அமர்த்திக்கொள்வது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த நூற்பாலைகளில் பணிபுரிவோரில் 30% உழைப்பு சக்தி, 13 வயதிலிருந்து 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளாவர். நாளொன்றுக்கு ரூ.190 முதல் ரூ.260 வரை சம்பளம் தருவதாக சொல்லிக் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அடையாள அட்டை, போக்குவரத்து வசதி, தொழிலாளர் காப்பீட்டு வசதி, இரண்டு ஜோடி சீருடை, பிராவிடண்ட் ஃபண்ட் போன்றவை வழங்கப்படுவதாக நிர்வாகத் தரப்பில் கூறப்படுகிறது. குழந்தைகளின் பள்ளி மாற்றுச் சான்றிதழ் கோரப்படுகிறது. அது கிடைக்காவிடில் அரசு மருத்துவரிடம் 14 வயது பூர்த்தியானவர் என்ற சான்றிதழ் பெறப்படுகிறது. இந்த வருடம் பள்ளி விடுமுறைக் காலத்தில் நூற்பாலைகளில் பணிக்குச் சென்ற குழந்தைகள், விடுமுறை முடிந்ததும் பள்ளிக்குச் செல்ல முனைந்தபோது, குழந்தைகளுக்கு அதிகமான மதிப்பூதியம் தருவதாகக் கூறி, குழந்தைகள் பணியைத் தொடர்ந்து செய்து பள்ளிப் படிப்பை கைவிடும் வகையில் நூற்பாலை நிர்வாகம் செய்துள்ளது. அது மட்டுமின்றி குழந்தைகள் அதிக நேரம் உழைக்க வேண்டும் என நிர்வாகம் கட்டாயப்படுத்துவதாகவும் குழந்தைகள் உண்மையறியும் குழுவினரிடம் தெரிவித்தனர்.

கொம்பேறிபட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் எஸ். பிரகாஷ்ராஜ், த/பெ. வேலுசாமி (கம்பிளியாம்பட்டி), சதீஷ்குமார் த/பெ. பொம்மு நாயக்கர், (கம்பிளியாம்பட்டி) சிவசந்திரகலா த/பெ. சுந்தரம் (கம்பிளியாம்பட்டி) L. ஆண்டிச்சாமி த/பெ. இலட்சுமணன் (ஸ்ரீராமபுரம்) அழகர்சாமி த/பெ. விண்ணுரை வள்ளி D/o பழனிச்சாமி (பெத்தபட்டி) ஆகியோர் மாற்றுச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தனர். இதில் சந்தேகமடைந்த பள்ளி நிர்வாகிகள் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் கவிதாவிடம் கூறியுள்ளனர். கவிதா, கல்வித்துறை அதிகாரிகளிடம் தெரிவித்ததன்பேரில் கல்வித்துறை சிவா டெக்ஸ்டைலில் 'ரெய்டு' நடத்தியதில் பள்ளியில் மாற்றுச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்த குழந்தைகள் அந்த நூற்பாலையில் இருந்ததைக் கண்டுபிடித்தனர். அவர்கள் சிவா டெக்ஸ்டைலிலிருந்து 22 குழந்தைகளை மீட்டனர். அதில் 10 குழந்தைகள் இன்றுவரை பள்ளிக்குத் திரும்பவில்லை.

வடமதுரை மற்றும் வேடசந்தூர் வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்கு தினமும் குறைந்தது 30 வண்டிகள் (பஸ், வேன்) சென்று தொழிலாளர்களையும் குழந்தைகளையும் மில்களுக்கு சென்று வருகிறது. இவை பணி முடிந்து அவர்களை மீண்டும் அழைத்துச் சென்று கிராமத்தில் விடுகிறது. குழந்தைகளைப் பணியில் அமர்த்தியிருப்பதால் மில் நிர்வாகிகள் பெரியவர்களுக்கு வேலை தரமறுக்கின்றனர். குழந்தைகள் புளோரூம், கார்டில், ஆர்எஸ்டி சிம்ப்ளிஸ், ஆட்டோ கேளன், வைண்டிஸ் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இந்த மில்களுக்கு சென்றுவர குறைந்தது 10 கிலோ மீட்டரிலிருந்து 30 கி. மீட்டர் வரை பயணம் செய்கிறார்கள். இந்த நூற்பாலைகளில் குறைந்தபட்சம் 10 மணி நேரத்தை இந்த குழந்தைகள் செலவிடுகின்றனர். விவசாயத்தை நம்பியிருந்த இப்பகுதி மக்கள் மழை பொய்த்துப் போவதால் பொருளாதார நெருக்கடி காரணமாக வேறு வழி இல்லாததால் இந்த தொழிலுக்கு தங்கள் குழந்தைகளை அனுப்புகின்றனர். இதனால் இந்தப் பகுதி குழந்தைகளின் வாழ்க்கை நூற்பாலைகளுக்குள் சிறை வைக்கப் படுகிறது. மழையில்லாமல் விவசாயம் பொய்த்துப் போனதால் தங்கள் கிராமங்களைவிட்டு கேரளாவுக்கு தினக் கூலிகளாக குடும்பத் தலைவர்கள் சென்றுவிடுகிறார்கள். சிறுவர்களை இந்த நூற்பாலைகளில் வேலை செய்வதற்கு விட்டுச் செல்கிறார்கள். ஊராட்சித் தொழிற்சங்கங்கள், தொழிலாளர் அமைப்புகள், இந்த பிரச்சனைகளைக் கண்டுகொள்ளாமல் அமைதியாக இருக்கின்றன. அதாவது குழந்தைகளைப் பணியமர்த்துதல், தொழிலாளியின் நியமனச் சம்பளம், வேலைப் பாதுகாப்பு போன்றவை குறித்து இவை மௌனம் சாதிக்கின்றன. 13–18 வயதுடைய குழந்தைகள் வெளி மாநிலங்களிலிருந்து இங்கு கொண்டு ஹாஸ்டலில் தங்க வைக்கப்பட்டும்

பணியமர்த்தப்பட்டுள்ளனர். தமிழகத்தில் பெரம்பலூர், விழுப்புரம், கடலூர் போன்ற மாவட்டங்களிலிருந்தும் இங்கு வந்து பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் ஹாஸ்டலில் தங்கியுள்ளனர். 14 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளையும் பணியாளர்களாக அமர்த்தியுள்ளனர். தொழிற்சாலை சட்டத்தின்படி 14 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை பணியமர்த்தியுள்ளதாக முதலாளிகள் கூறுகின்றனர். ஆனால், இது குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் – இந்திய அரசியலமைப்புச் சட்டம் 14, 15, 19, 21, 21A, 23, 24, 39 (e) + 46 மற்றும் 47 குழந்தை தொழிலாளர் சட்ட விரோதமாக்குகிறது. அதுமட்டுமின்றி ஐ.நா. குழந்தை உரிமைகள் உடன்படிக்கை சரத்து 32ன்படி 18 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தையும் பாதுகாக்க வேண்டும் என்கிறது.

### பிலாத்து ஊராட்சி:

திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ஒன்றியம் பிலாத்து ஊராட்சிக்குட்பட்ட கிராமம் கம்பிளியாம்பட்டி. இங்கு விவசாயம் தான் முக்கியத் தொழிலாக இருந்து வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து விட்டதால் விவசாய உற்பத்தியில் ஈடுபட முடியாமல் கிராம மக்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை நம்பியே உள்ளனர். சிலர் கட்டுமானத் தொழிலாளர்களாக கேரளா, சென்னை போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். நிலத்தடி நீர் மட்டமும் 600 அடிக்கு கீழே சென்றதால் விவசாய உற்பத்தியே இல்லாமல் வறட்சியாக காணப்படுகிறது. கிராமத்திலுள்ள மொத்த குடும்பங்கள் 350, மலைவேட நாயக்கர் – 150 குடும்பங்கள், கம்பளத்து நாயக்கர்– 100 குடும்பங்கள், ஆதி திராவிடர்கள் – 21 குடும்பங்கள், வள்ளுவர் – 12 குடும்பங்கள், பிற சாதியினர் – 37 குடும்பங்கள் உள்ளனர். கிராமத்தில் குடிநீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. ஒரு குடம் தண்ணீர் ரூ.10/–க்கு வாங்கி பயன்படுத்துகிறார்கள். அதுவும் உப்புத் தண்ணீராக உள்ளது. கிராம ஊராட்சி மூலம் வாரம் ஒருமுறைதான் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. வடமதுரையிலிருந்து பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. கிராமத்தில் நடுநிலைப்பள்ளி ஒன்று உள்ளது. உயர்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டுமானால் 2 கி.மீ. தூரமுள்ள பக்கத்து கிராமத்திற்குத்தான் செல்ல வேண்டும். தொண்டு நிறுவனம் மூலமாக பெண்கள் இயக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

விவசாய உற்பத்தியில் வேலைவாய்ப்பு இல்லாததால் இங்குள்ள பெண்கள் நூற்பாலைகளுக்கு தினக்கூலியாக வேலைக்குச் செல்கிறார்கள். இதில் வளரிளம் பருவத்தைச் சார்ந்த ஆண்களும், பெண்களும் அதிகமுள்ளனர். பள்ளி விடுமுறை நாட்களில் வேலைக்குச் செல்லும் 13 வயதிற்குட்பட்ட குழந்தைகள், பின்பு பள்ளி இடைநிறுத்தம் செய்து தொடர்ந்து வேலைக்குச் செல்லும் நிலைமைக்கு ஆளாகிறார்கள். ஒரு நாளைக்கு தினக்கூலியாக ரூ.180லிருந்து ரூ.210 வரை கிடைப்பதால் பெற்றோரும் தொடர்ந்து குழந்தைகளை கல்விக்கூடங்களுக்கு அனுப்பாமல் நூற்பாலைக்கே அனுப்பும் அவலநிலை உருவாகியுள்ளது. இந்த கிராமத்தில் மலைவேட நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த 150 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் தங்களது இனத்தை பழங்குடியினர் பட்டியலில் இணைத்து சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு நிராகரித்ததால் நீதிமன்றத்தை நாடி வழக்கு தொடுத்துள்ளனர். இதுவும் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாமல் நூற்பாலைகளுக்கு அனுப்பும் மனநிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதனை சாதகமாகப் பயன்படுத்தி தொழிற்சாலை நிர்வாகிகள், பள்ளி கோடை விடுமுறையின்போது குழந்தைகளைப் பணியில் அமர்த்தி நிரந்தரமாக குழந்தைகள் தொழிற்சாலையில் பணியாற்றிவர, அவர்களின் மாற்று சான்றிதழ்களை கேட்கின்றன. அதுமட்டுமில்லாமல் குழந்தைகள் வேலை செய்த 2 மற்றும் 3 மாத சம்பளப் பணத்தை வழங்காமல், நீங்கள் தொடர்ந்து தொழிற்சாலையில் வேலை செய்தால்தான் கடந்த 2, 3 மாத சம்பளப் பணத்தை வழங்க முடியும் என்று கூறி இருக்கின்றனர். இதற்கு பயந்துகொண்டு குழந்தைகளும் பள்ளியை விட்டு தொழிற்சாலையில் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கொம்பேறிபட்டி, உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை சத்தியவாணி இந்த வருடம் பள்ளி வேலை நாட்களில் வருகைப் பதிவேட்டில் அதிகமான குழந்தைகள் பள்ளிக்கு வராமல் இருந்ததை அறிந்து, அவர்கள் எதற்காக மாற்றுச் சான்றிதழ் கேட்கின்றனர் என்பதை ஆய்வு செய்தார். இத்தகைய சூழ்நிலையில் கொம்பேறிபட்டி உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் 20க்கும் மேற்பட்டோர் பள்ளியில் மாற்றுச் சான்றிதழ் வாங்க தொடர்ந்து வந்துகொண்டிருந்ததை அடிப்படையாகக் கொண்டு, கொம்பேறிபட்டி உயர்நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியை சத்தியவாணி, அந்த ஊரில் உள்ள பிலாத்து ஊராட்சி துணைத் தலைவர் கவிதாவிடம் கூறியுள்ளார். கல்வித்துறைக்கு தகவலளித்து குழந்தைகளை, தொழிற்சாலையிலிருந்து மீட்டு, மீண்டும் படிப்பதற்கு பள்ளிக்கு அழைத்து வந்தனர். பல குழந்தைகள் இன்னும் பள்ளிக்கு வந்து சேரவில்லை என்பதை குழுவினர் விசாரித்து அறிந்தனர்.

### ஆர். பிரபு, த/பெ. ரெங்கநாதன், கம்பளியாம்பட்டி:

குழந்தைத் தொழிலாளியான ஆர். பிரபு கூறியதாவது: எனக்கு ஒரு அக்கா, பெயர் பட்டதாயி, திருமணம் ஆகிவிட்டது. எனது அண்ணன் பிரபாகரன் (18) கட்டிட வேலை செய்கிறார். நாங்கள் குடும்பத்துடன்

கம்பிளியாம்பட்டியில் வசித்து வருகிறோம். நான் 2013–2014 கடந்த ஆண்டு 10ம் வகுப்பு படித்தேன். தேர்வில் 260 மதிப்பெண் வாங்கினேன். பிறகு விடுமுறை நாட்களில் பன்னாரி மில்லிற்கு வேலைக்குச் சென்றேன். அங்கு விடுதி வசதியும் உண்டு. நாள் ஒன்றுக்கு 250 ரூபாய் கூலி கிடைக்கும். இந்த மில்லில் 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் வேலை செய்து வந்தனர். 2 வாரத்திற்கு முன் அதிகாரிகள் ரெய்டு வந்த பிறகு நிறைய குழந்தைகளை அனுப்பிவிட்டனர். சிவா மில்லில் 100க்கும் மேற்பட்ட குழந்தைகள் வேலை செய்கின்றனர். நான் வீட்டிலிருந்து 2 மணிக்கு கிளம்புவேன். மதியம் 2லிருந்து 10 மணி வரையுள்ள ஷிப்ட்டில் வேலை செய்கிறேன். கம்பெனி வண்டி வரும். அதில் செல்வேன். பிறகு அதிலேயே வீட்டிற்கு வருவேன். வருகைப் பதிவு எடுப்பார்கள். எனக்கு திங்கட்கிழமையன்று வார விடுமுறை. ஒரு மாதத்திற்கு 6500 வரை சம்பளம் கிடைக்கும். சிவா மில்லில் 12 வயது குழந்தைகள் வேலை பார்க்கின்றனர். அங்கும் தங்கும் வசதி (விடுதி) உண்டு.

### கொம்பேறிபட்டி ஊராட்சி:

**M. சத்தியவாணி, தலைமை ஆசிரியை, அரசு உயர்நிலைப்பள்ளி, கொம்பேறிபட்டி:**

எனது பெயர் சத்தியவாணி, நான் கொம்பேறிபட்டி உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியையாக, பணியாற்றி வருகிறேன். கடந்த 2 ஆண்டுகளாக இந்த பள்ளியில் தலைமை ஆசிரியையாக இருக்கிறேன். இந்தப் பள்ளி தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியில் மொத்தம் 292 குழந்தைகள் படிக்கின்றனர். ஆனால், அதற்கான இடம் ஒதுக்கப்படவில்லை. அரசும், இதைப் பற்றி கண்டுகொள்ளவில்லை. நான் கல்வித்துறைக்கு இடம் வசதியின்மைப் பற்றி எடுத்து கூறியும் அவர்கள் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர். மேஜை, நாற்காலிகள் கூட கிடையாது. நான் வந்த பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கினேன். இடப் பற்றாக்குறையால், மாணவ மாணவிகளுக்கு பாடம் நடத்துவது கடினமாக உள்ளது. இந்த சூழ்நிலைக்காக போராடிக்கொண்டிருக்கும் தருவாயில் சில மாணவ மாணவிகள் தனது முழுப் பரீட்சை தேர்வை முடித்துவிட்டு அந்த 2 மாத விடுமுறையில், குடும்ப பொருளாதார சூழ்நிலைக் காரணமாக, மில் வேலைக்கு செல்கின்றனர். வருடா வருடம் 10 குழந்தைகள் மாற்றுச் சான்றிதழ் கேட்பார்கள். இந்த வருடம் பள்ளி திறந்தவுடன் 2 நாள் பள்ளிக்கு வந்த பிறகு நிறைய குழந்தைகள் மாற்றுச் சான்றிதழ்கள் கேட்டனர். இதை சாதகமாகப் பயன்படுத்தி தொழிற்சாலை நிர்வாகிகள், பள்ளிச் சிறுவர்களின் முன் மாத சம்பளப் பணத்தை கொடுக்காமல், தொடர்ந்து வேலைக்கு வரச் சொல்லி கட்டாயப்படுத்தி–யிருக்கின்றனர். அதுமட்டுமில்லாமல் மாற்றுச் சான்றிதழ்களை, வாங்கிக்கொண்டு வரும்படியாக கட்டாயப்படுத்தியிருக்கின்றனர். மாணவ, மாணவிகளும் முன் மாத சம்பளப் பணத்தை கொடுக்காமல் போய்விடுவார்களோ! என்று நினைத்துக்கொண்டு தொடர்ந்து வேலைக்கு செல்வதற்காக மாற்றுச் சான்றிதழ்களை வாங்க தொடர்ந்து வந்தனர். நான் மாணவர்களிடம் விசாரித்ததின் அடிப்படையில் பிலாத்து ஊராட்சிமன்ற துணைத் தலைவர் கவிதாவிடம் இதைப் பற்றி புகார் கொடுத்திருந்தேன். அவர்களும் இதை மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்து 22 குழந்தைகளை கல்வித்துறை (SSA) மூலம் தொழிற்சாலையிலிருந்து மீட்டுக்கொண்டு வந்தனர்.

பிறகு, அவர்களில் சிலர் பள்ளிக்கு வருகின்றனர். தொடர்ந்து, கடந்த வருடங்களில் 10க்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளியிலிருந்து இடையில் நின்றுவிடுவார்கள். ஆனால், இந்த வருடம் அதிக மாணவ, மாணவிகள் பள்ளி சான்றிதழ்களை கேட்டதால் மாணவர்களின் மீது சந்தேகம் ஏற்பட்டது. அதில் சில மாணவ, மாணவிகள் தனது பள்ளிப் படிப்பைத் தொடர மறுத்து நின்றுவிட்டனர். மீதம் உள்ள சிலர் தனது கல்வியை தொடர பள்ளிக்கு வந்துள்ளனர். இந்த கொம்பேறிபட்டி உயர்நிலைப் பள்ளியில், தலைமை ஆசிரியராக பணியாற்றுவது என்னுடைய இலட்சியம், என் கனவின்படி அனைத்து மாணவ, மாணவிகளும் நன்றாக படித்து உயர்நிலையை அடைய அவர்களுக்காக பணியாற்றி வருகிறேன். இந்த வருடம், 10ம் வகுப்பு முடிவில் 77 சதவீதம் பெற்று கொம்பேறிபட்டி உயர்நிலைப் பள்ளி உயர்ந்திருக்கிறது. இனியும் அவர்களுக்கு சிறப்பான கல்வி கற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் நான் முக்கிய பங்கு வகிப்பேன். தொடக்கப் பள்ளி, கட்டிடத்தில் உயர்நிலைப் பள்ளியை நடத்தி வருவது கடினமாக உள்ளதால், அதற்கான சிறப்பு கட்டிடங்களை அமைத்து தர அரசிடம் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறேன். இனி குழந்தைகள் மில் வேலைக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்த குழந்தைகளின் பெற்றோரிடம் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு வழிமுறைகளை மேற்கொள்வேன். குழந்தைத் தொழிலாளர் வயது 14 ஆக இருப்பதை 18 ஆக மாற்ற வேண்டும். உங்களைப் போன்ற தொண்டு நிறுவனங்கள் குழந்தைத் தொழிலாளர் வயதினை 18 ஆக மாற்ற முயற்சிக்க வேண்டும். அதற்கு நீங்கள், இவர்களுக்காக அரசிடம் கோரிக்கை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### ஸ்ரீராமபுரம் ஊராட்சி:

**அறியம்மாள், மாணவி (கொம்பேறிபட்டி உயர்நிலை பள்ளி)**

எனது பெயர் அறியம்மாள். எனது அப்பா பெருமாள். மரம் அறுக்கும் வேலை பார்க்கிறார். அம்மா தங்கம்மா.

அவருக்கு கண் பார்வை கிடையாது. தங்கை ஐஸ்வர்யா 3ம் வகுப்பு படிக்கிறாள். தம்பி சுப்பிரமணி 6ம் வகுப்பு படிக்கிறான். நாங்கள் ஸ்ரீராமபுரத்தில் வசித்து வருகிறோம். நான் இந்தப் பள்ளியில் 6ம் வகுப்பு வரை படித்தேன். பிறகு இடையில் நின்றுவிட்டு மில் வேலைக்குச் சென்றேன். கடந்த 2 வருடமாக மில் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். நான் வேலை செய்த அந்த 2 வருடமும் மில் விடுதியில்தான் தங்கி வேலை பார்த்தேன். ஒரு அறையில் 8 பெண்கள் தங்குவார்கள். வேலை நேரம் காலை 8லிருந்து மாலை 6 மணி வரை. ஆனால், வேலை நேரத்தைத் தொடர்ந்து over time பார்க்கச் சொல்லி வற்புறுத்துவார்கள். அதற்கென தனி பணம் மாதம் 1000 ரூபாய் கொடுப்பார்கள். வாரம் ஒரு ஷிப்ட் என்ற முறையில் 3 ஷிப்ட்—ஆக வேலைப் பார்த்தேன். உணவு, டி.வி. என அனைத்து வசதிகளும் உண்டு. உணவும் நன்றாகத்தான் இருக்கும். ஒருநாள் விடுமுறை எடுத்தால் அதற்கென சம்பளப் பணத்தில் ஒருநாள் கூலியை பிடித்துக் கொள்வார்கள். மற்றபடி, உடல்நிலை சரியில்லை என்றாலும் அவர்களே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வார்கள். ஆனால், வேலை நேரத்தைத்தான் விரிவுபடுத்தி அதிகமாக வேலை செய்ய சொல்வார்கள். என்னுடைய வேலை என்னவென்றால் இழைக் கட்டுவது, அதாவது நூல் எடுத்து இயந்திரத்தில் விடுவது, இது போன்று வேலைகளை செய்து வந்தேன். அப்பா, அம்மா வந்து விடுதியில் எங்களை பார்த்துவிட்டுச் செல்வார்கள்.

எனக்கு படிப்பதற்கு மிகவும் விருப்பமாகத்தான் இருந்தது. ஆனால், எனது குடும்பச் சூழ்நிலை காரணமாகத்தான் நான் வேலைக்குச் சென்றேன். எனது பெற்றோர் சண்டை போட்டுக்கொண்டு பேசமாட்டார்கள். இதற்கு முக்கியக் காரணம் வறுமைதான். அதனால்தான், நான் வேலைக்குச் சென்றேன். ஆனால், இப்போது தொழிற்சாலையே எங்களை வெளியில் அனுப்பி விட்டதால் நான் படிக்க வந்துள்ளேன். நேற்றுதான் பள்ளிக்கு வந்தேன். இப்போது, RTE சட்டத்தின் கீழ் 8ஆம் வகுப்பில் படிக்கிறேன். இனி வேலைக்குச் செல்ல மாட்டேன். என்னுடைய படிப்பைத் தொடருவேன். படித்து முடித்துவிட்டு நல்ல வேலைக்கு செல்ல வேண்டுமென்ற நோக்கத்தில் படிக்கிறேன்.

### தாரணி (16 வயது பெண்), மில் தொழிலாளி, ஸ்ரீராமபுரம்

எனது பெயர் தாரணி. நான் 7ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு மில் வேலைக்கு சுமார் இரண்டரை வருடங்கள் சென்றேன். என்னுடன் பிறந்தவர்கள் 4 அக்கா, 2 தங்கை. அதில், 2 தங்கைகள் தவிர மீதம் 4 பேரும் மில் வேலைக்குத்தான் செல்கிறோம். இதில் 2வது அக்காவிற்கு மட்டும் திருமணம் ஆகிவிட்டது. இப்போது நாங்கள் 3 பேர் மட்டும்தான் சுமங்கலி திட்டத்தின் மூலம் வேலையில் சேர்ந்துள்ளோம். எங்களுடன் ஊரில் உள்ள பெண்கள், பொன்னு போதும், சண்முகவள்ளி உட்பட பெண்கள், ஆண்கள் என 100க்கும் மேற்பட்டோர் மில் வேலைக்கு செல்கிறோம். கடந்த 2 வருடத்திற்கு முன்பு 100 ரூபாய் கூலி இருந்தது. ஆனால், இப்போது 250வரை வாங்குகின்றோம். மாதம் 7000, 6000 என்று சம்பளம் வாங்குகின்றோம். எங்களில் சிலருக்கு படிப்பு சரியாக ஏறவில்லை மற்றும் சிலபேர் குடும்ப சூழ்நிலை காரணமாக வேலைக்கு செல்கிறோம். விடுதியில் தங்குபவர்கள் தங்கலாம். சிலபேரை வீட்டின் அருகிலேயே வேன் கொண்டு வந்துவிடும். தொழிற்சாலை நிர்வாகிகள் கால அட்டவணை வகுத்து, அதன்படி வேலை வாங்குவார்கள். மதியம் 2.40 சென்றால் இரவு 2.50க்கு வருவோம். வாரம் ஒரு ஷிப்ட் என்ற கணக்கில் 3 ஷிப்ட்—ஆக வேலை செய்வோம்.

15 நாட்களுக்கு ஒரு முறை சம்பளப் பணம் 3600 ரூபாய் கொடுப்பாங்க அல்லது மாதம் சம்பளமும் கொடுப்பார்கள். திண்டுக்கல் மாவட்டத்தில் மில் வேலைகளுக்கு செல்வோரின் சதவீதம்தான் அதிகமாக இருக்கும். வாரம் ஒரு நாள் விடுமுறை விடுவார்கள். மற்றபடி வேலை நேரத்தை அதிகரித்து அதற்கும் சேர்த்து ஊதியம் வழங்குவார்கள். பெரும்பாலானோர் திருமணம் ஆகாதவர்கள்தான் மில் வேலை செய்வார்கள். ஏனென்றால், 8ம் வகுப்பு வரை படித்தவர்கள்தான் வேலைக்கு எடுப்பார்கள். மற்றபடி பெரியவர்கள் (கடைநிலை ஊழியர்) ஹவுஸ் கீப்பிங் வேலை செய்வதற்கு எடுத்துக்கொள்வார்கள். இவ்வாறு பெரும்பாலான தொழிற்சாலையில் 14 வயதிற்கு மேற்பட்டோர் முதல் 40 வயதிற்கு உட்பட்டோர் வரை அதிகமாக வேலை செய்கின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் மழை பெய்தால்தான் வேலையிருக்கும். இல்லையென்றால் வரண்டுதான் காணப்படும். இந்த சூழ்நிலையில் பெற்றோர்கள் கேரளத்திற்கு வேலைக்கு செல்கின்றனர். பிள்ளைகள் இங்குள்ள மில் வேலைக்கு செல்கின்றனர்.

### அரசு அதிகாரிகள்

### கலையரசி, முதன்மை கல்வி அலுவலர் (CEO), திண்டுக்கல்

எனது பெயர் கலையரசி, நான் திண்டுக்கல் மாவட்டத்தின் கல்வி துறை அதிகாரியாக செயல்பட்டு வருகிறேன். இந்த குழந்தைகள் காலம் காலமாக தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றனர். இவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக மாறுவதற்கு முக்கிய காரணம் வறுமை. தங்களது குடும்ப வறுமை காரணமாக பெற்றோர்கள் குழந்தைகளை வேலைக்கு, அனுப்புகின்றனர். எனவே இவர்களின் பள்ளி படிப்பு பாதிப்பதற்கு முக்கிய காரணம் பெற்றோர்கள்தான். அவர்களுக்குத் தேவையானது பணம் மற்றும் அடிப்படைத்

தேவைகள். இதனை சாதகமாக மில் தொழிற்சாலை நிர்வாகிகள் பயன்படுத்திக்கொண்டு இவர்களை குழந்தை தொழிலாளர்களாக மாற்றி, போதிய ஊதியம் வழங்காமல் இவர்களை வேலை செய்வதற்குப் பயன்படுத்திக்கொள்கின்றனர். குழந்தைகள் தங்களது முழு ஆண்டுத் தேர்வு முடிந்த பிறகு அந்த 2 மாத விடுமுறையில் குடும்ப சூழ்நிலை காரணமாக வேலைக்கு செல்கின்றனர். இதனடிப்படையில் மில் நிர்வாகிகள், குழந்தைகளை நிரந்தர பணியிலமர்த்துவதற்காக அவர்களிடம் சான்றிதழ்களை வாங்கி வரச் சொல்கின்றனர். அதுமட்டுமில்லாமல் ஏற்கனவே செய்த முன் மாத சம்பளப் பணத்தை நிறுத்தி வைத்துக்கொண்டு அவர்களை வேலைக்கு வரச்சொல்லி கட்டாயப்படுத்துகின்றனர். இதுவரை 600 குழந்தைகளை இந்த டாஸ்க் ஃபோர்ஸ் (Task Force) குழுவினர் தொழிற்சாலைகளில் சோதனையிட்டு மீட்டுள்ளனர்.

### இயக்குநர், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் (NCLP):

நாங்கள், 14 பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு குறிப்பாக பன்னாரி மற்றும் சிவா மில்லுக்கு சோதனை செய்ய சென்றிருந்தோம். அதிலும் சிறப்பாக, இந்த இரண்டு மில் தொழிற்சாலைகளுக்குத்தான், சோதனையிட ஆய்வுகள் மேற்கொண்டோம். இதனடிப்படையில், டாஸ்க் ஃபோர்ஸ் என்ற குழுவானது PIF, IC, Doctor, Childline, CWC, DCPC ஆகியோர் அடங்கிய குழு, விசாரித்ததின் அடிப்படையில் பெரும்பாலான குழந்தைகள் ஏஜென்டுகளை அடிப்படையாகக் கொண்டு குழந்தைத் தொழிலாளர்களாக மில் தொழிற்சாலையில் வேலை செய்கின்றனர். அரசு அதிகாரிகள் சோதனையிட்டதின் அடிப்படையில் இதுவரை 600 குழந்தைகளை மீட்டு NCLP என்ற அமைப்பின் மூலம் அவர்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டும் என்று வழி வகுக்கப்பட்டது. இதுமட்டுமல்லாமல் அதிகப்படியான வடமாநில குழந்தைகள் குறைந்த சம்பளத்திற்கு வேலை பார்க்கின்றனர். அவர்களுக்கு மில் விடுதியில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர்.

### தொழிற்சாலை நிர்வாகம்

### திரு. கோபால், தொழிற்சாலை மேலாளர், சண்முக வேல் நெசவு தொழிற்சாலை:

எனது பெயர் K. கோபால். தொழிற்சாலை மேலாளராக பணியாற்றுகிறேன். தொழிற்சாலை நிர்வாகியின் பெயர் வேலுச்சாமி (கவுண்டர்). அவருடைய 13 மில்லில் இதுவும் ஒன்று. இவை அனைத்தும் சண்முகவேல் க்ரூப்–பைச் சார்ந்தது. தாடிக்கொம்பில் இருக்கும் தொழிற்சாலைதான் தலைமை அலுவலகமாக உள்ளது. இங்கு 15 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளைத்தான் வேலைக்கு எடுக்கிறோம். அதுவும் தாடிக்கொம்பில் உள்ள தலைமை அலுவலகத்தில் உள்ள மனித வள மேம்பாடு அதிகாரி வேலைக்கு வரும் நபர்களை தேர்ந்தெடுப்பதன் மூலம் மற்ற 13 தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்துவோம். இந்தத் தொழிற்சாலை சுமார் 40 வருடங்களாக இயங்கிக்கொண்டு வருகிறது. 320 தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர். அதில் ஆண்கள் 200, பெண்கள் 100 பேர் என்ற விகிதத்தில் வேலை செய்கின்றனர். இந்தத் தொழிற்சாலையில் 15 முதல் 18 வயதிற்குட்பட்டவர்கள் 50 சதவீதத்தில் வேலை பார்க்கின்றனர். 3, 4 தொழிற்சாலைகள் இணைந்து விடுதி வைத்து நடத்துகிறோம். அதில் 80 தொழிலாளர்கள் தங்கி வேலைப் பார்க்கின்றனர். இவர்கள் பொதுவாக கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்து தங்கி வேலைப்பார்க்கிறார்கள். மாற்றுச் சான்றிதழின் நகலை மட்டும்தான் வாங்குவோம். மேலும் அவர்களின் வீட்டு முகவரியும் வாங்கி வைத்துக்கொண்டு பெற்றோர்கள் தனது பிள்ளைகளை பார்க்க வரும்போது அடையாள அட்டையை எடுத்துக்கொண்டு வந்தால்தான் அனுமதிப்போம். பொதுவாக பள்ளி மாணவ, மாணவிகளை வேலைக்கு எடுப்பதில்லை. அவர்கள் வேலைக்கு வர ஆர்வமாகக் கேட்டாலும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

மில்லில் வேலை பார்க்கும் தொழிலாளர் ரூ.5000த்திலிருந்து 13000 வரை சம்பளம் மற்றும் அவர்கள் தங்குவதற்கான அடிப்படை வசதிகள் கம்பெனி நிர்வாகமே செய்து தரும். வாரம் இரண்டு முறை வேடச்சந்தூரிலிருந்து மருத்துவ பரிசோதனைக்காக டாக்டர் சுகுணா, தொழிலாளர்களை பரிசோதித்துவிட்டு செல்வார்கள். அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு கவசங்களை கம்பெனி நிர்வாகமே வழங்கும். தொழிற்சாலை எந்திரங்கள் மற்றும் பஞ்சிலிருந்து வரும் தூசிகளால் அவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு தூசிகளை உருஞ்சுவதற்கு தனி எந்திரங்கள் பொறுத்தப்பட்டுள்ளன. 12ம் வகுப்பு படித்துவிட்டு வந்தவர்களுக்கு மேல் படிப்பு படிப்பதற்கு தொழிற்சாலை நிர்வாகம் பல்வேறு வழிகளில் ஊக்குவிக்கின்றன. பெரும்பாலான சிறுவர்கள் வேலைக்கு செல்வதற்குக் காரணம் பருவமழை பொய்ப்பதனால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியே காரணம்.

### கே. பிரபாகரன், பொது மேலாளர், மனிதவள மேம்பாடு, பன்னாரி அம்மன் நூற்பாலை:

என்னுடைய பெயர் பிரபாகரன், நான் பன்னாரி அம்மன் தொழிற்சாலையில் பொது மேலாளராக பணியாற்றுகிறேன். குழந்தைத் தொழிலாளர்களாக யாரும் இங்கு வேலை பார்ப்பது இல்லை. 14 வயதிற்கு

மேற்பட்ட குழந்தைகளை தொழிற்சாலை சட்டப்படிதான் நாங்கள் வேலைக்கு சேர்க்கின்றோம். மற்றபடி அவர்களின் கல்வி நிலை பாதிக்கும்படி நாங்கள் எந்தவிதமான இடையூறுகளையும் ஏற்படுத்தவில்லை. கட்டாயப்படுத்தி அவர்களை வேலைக்கு சேர்ப்பதில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை அவர்களின் சம்பளப் பணம் கொடுக்கப்படும். பள்ளி விடுமுறையில் வேலைக்கு வரும் குழந்தைகளை பொதுவாக நாங்கள் வேலைக்கு அமர்த்துவதில்லை. அவர்கள் ஒன்று, இரண்டு மாதம் வரை இருந்துவிட்டு சென்றுவிடுவார்கள் என்று எங்களுக்கு தெரியும். எங்களுக்குத் தொல்லையாகத்தான் இருக்கும். இதனை அறிந்து பொதுவாக குழந்தைகளை நாங்கள் வேலைக்கு அமர்த்துவதில்லை. நாங்களும் படிக்கின்ற குழந்தைகளுக்கு உதவி செய்கின்றோம். அப்படி இருக்கும்போது நாங்கள் எப்படி பள்ளிக்குச் செல்லக்கூடாது, மாணவ மாணவிகள் வேலைக்கு வரவேண்டும் என்று கட்டளை விடுத்திருப்போம். எங்களுடைய தொழிற்சாலை சார்ந்த விடுதியிலேயே தங்கி வேலை செய்யும் குழந்தைகளுக்கு அங்கேயே தங்கி படிப்பதற்கு பல்வேறு விதமான தொழிற்கல்வி சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இங்கு வேலை செய்யும் குழந்தைகள் மற்றும் 10, 12ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர் வைத்துக் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் தேர்ச்சி அடைந்த பிறகு கல்லூரிப் படிப்பை மேற்கொள்ள நாங்கள் உதவி செய்கின்றோம். இதுமட்டுமில்லாமல் பல்வேறு தொழிற்கல்வி சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு எங்களுடைய தொழிற்சாலையின் அலுவலகத்தில் வேலைக்கு எடுத்துக்கொள்கிறோம்.

இதுபோன்று சமூக சேவை அடிப்படையிலும் மனிதாபிமான அடிப்படையிலும் எங்களுடைய பணியை சரியாகச் செய்கிறோம். ஆனால் எங்களை செய்தித்தாள்களில் தேவையில்லாமல் விமர்சித்து இருக்கிறார்கள். தொழிற்சாலை சட்டப்படி நாங்கள் 14 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளை பணியில் அமர்த்துகின்றோம். மற்றபடி விதிமுறைகளை மீறி இந்த செயலை செய்யவில்லை. குழந்தைகளை படிக்க வேண்டாம் என்று கட்டாயப்படுத்தவில்லை. 14 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளை மட்டும்தான் பணியில் அமர்த்துகின்றோம். அவர்களுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பு உடைமைகள், மருத்துவ வசதிகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள் ஆகிய வசதி வாய்ப்புகள் செய்து தருகிறோம். குழந்தைகளின் சம்பளப் பணத்தை 15 நாட்களுக்கு ஒருமுறை வழங்குகிறோம். அவர்களின் வைப்பு நிதி (Provident Fund), Insurance ஆகியவற்றை பிடித்துக்கொண்டு மீத சம்பளத்தை வழங்குவோம். PF ஆனது அவர்கள் வேலையை விட்டு நிற்கும் தருவாயில் அவர்களுக்கு கொடுக்கப்படும். இதுமட்டுமல்லாது, அய்யலூர் என்ற கிராமத்தில் அங்கன்வாடி பள்ளி கட்டிக்கொடுத்து இருக்கிறோம். இவ்வாறு எங்களது தொழிற்சாலையானது அரசு சட்ட விதிமுறைகளை கையாண்டு வருவதோடு இல்லாமல் சில சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர்கள் 8 மணி நேரம் வேலை செய்வார்கள். அதுவும் ஒரு வாரத்திற்கு ஒரு ஷிப்ட் என்ற அடிப்படையில் 3 ஷிப்ட்டாக வேலை பார்ப்பார்கள்.

**வேலை செய்யும் நேரம்:** காலை 6.00 – 2.00 மணி, மதியம் 2.00 – 11.00 மணி, இரவு 11.00 மணி காலை 6.00 மணி. இதனடிப்படையில் வேலை செய்வார்கள். இந்தத் தொழிற்சாலையில் பல்வேறு துறைகள் உள்ளன. மொத்தம் 900 தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். அதில் 50% பெண்கள் மற்றும் 50% ஆண்கள் வேலை பார்க்கிறார்கள். இவர்களுக்கு இடைவேளையின்போது திண்பண்டங்கள், தேநீர் வழங்கப்படும். இவ்வாறு பல வசதிகளுடன் தொழிற்சாலை வைத்து நடத்துகிறோம்.

**கண்டறிந்தவைகள்:**

1. **திண்டுக்கல் – கரூர் நான்கு வழிச்சாலை மற்றும் திண்டுக்கல் – திருச்சி நான்கு வழிச்சாலை ஆகிய பகுதிகளில் திண்டுக்கலிருந்து 20கி.மீ. வரை சாலையில் இருபுறங்களிலும் 76க்கும் மேற்பட்ட நூற்பாலைகள் (spinning mill) உள்ளன. ஒருசில முதலாளிகள் 2 முதல் 10 நூற்பாலைகளுக்கு உரிமையாளராக உள்ளனர். திண்டுக்கல் மாவட்டம் வறட்சிப் பகுதியாக இருப்பதால் இங்குள்ள கிராம மக்கள் விவசாய உற்பத்தியில் ஈடுபட முடியாமல் நூற்பாலைகளுக்கு வேலைக்கு செல்லும் நிலை உள்ளது. திண்டுக்கல் மாவட்ட அனைத்து நூற்பாலைகளிலும் 13 வயதிலிருந்து 18 வயதுவரையான ஏராளமான குழந்தைகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 8ஆம் வகுப்பு பள்ளிக் கல்வி முடித்த பின்னர் ஏராளமான குழந்தைகள் நூற்பாலைகளில் பணியமர்த்தப்படுவது வழக்கமாக உள்ளது. குறைந்தது 20லிருந்து 100 குழந்தைகள் வரை ஒவ்வொரு ஷிப்டிலும் (இரவு–பகல்) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.**

2. **குழந்தைகள் பெரியவர்களாகக் கருதப்பட்டு ஐ.நா. குழந்தை உரிமை உடன்படிக்கையும், இந்திய அரசியலமைப்புச் சட்டமும் உறுதி செய்துள்ள குழந்தைப் பருவமும் உரிமையும் மறுக்கப்பட்டு வருகிறது. குழந்தைகளின் பயண நேரம் தவிர 10 மணி நேரத்திற்கு மேல் பணி செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் 10 கி.மீ.லிருந்து 30 கி.மீ.வரை**

**பயணிக்கின்றனர். தினமும் கிராமங்களிலிருந்து தொழிற்சாலைக்கு அழைத்து வர 30க்கும் மேற்பட்ட வண்டிகள் (பேருந்து, வேன்) வந்து செல்கின்றன. இவ்வாறு அழைத்துச் செல்லப்படும் தொழிற்சாலைகளில் 30லிருந்து 40 சதவீதம் குழந்தைகள்தான்.**

**உயர்நிலை கல்வி பயில செல்லாமல் இடைநிற்றல் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. குறிப்பாக 8ம் வகுப்பிற்கு பின் கல்வி கற்க செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. மேலும் 14வயதுக்கு மேல் உள்ளவர்களை நூற்பாலைகளில் வேலைக்கு அமர்த்துவதால் 9ம்வகுப்பு செல்லும் மாணவர்கள், மாணவிகள் நூற்பாலைகளைத் தேர்வு செய்கிறார்கள்.**

பெரியவர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டு குழந்தைகள் பணியமர்த்தப்படுவதால் வேலையின்மை அதிகரித்து வறுமைக்குக் காரணமாகிறது. அத்துடன் அவர்களுக்கு குறைந்த கூலிதான் கிடைக்கிறது. வறுமை, குழந்தைத் தொழிலை உருவாக்கவில்லை. நூற்பாலைகளில் தொடர்ந்து குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டு வருவதால் வறுமை உருவாக்கப்படுகிறது. நூற்பாலைகளில் அனைத்து ப்ராஸஸ்களிலும் புளோரூம், கோர்டிங், ஆர்.எஸ்.பி, சிம்ளிங், ஆட்டோகோன், வைண்டி, ஸ்பின்னிங் போன்ற அனைத்திலும் குழந்தைகள் பணியமர்த்தப்படுகிறார்கள்.

குழந்தை உழைப்பு இந்திய அரசமைப்பு சட்டத்திற்கும் ஐ.நா. குழந்தை உரிமை உடன்படிக்கையும், பல்வேறு சர்வதேச உடன்படிக்கையும், ILO உடன்படிக்கையும் மீறுவதாகும். இவை உபரி மதிப்பை ஊட்டவும் மிகப்பெரிய பொருளாதார சுரண்டலுமாகும். இது குழந்தைக்கு தரமான கல்வி அளிக்கவில்லை. அவர்களின் ஆரோக்கியம், குழந்தைத் தன்மையை அழித்து, அவர்களை பாகுபாட்டிற்குள் தள்ளுகிறது. குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது வறுமை காரணமாக அல்ல. மில் நிர்வாகத்தினரால் வறுமை உருவாக்கப்படுகிறது – குழந்தை நீதி மறுக்கப்படுகிறது.

**14 வயதுக்கு மேற்பட்டவர்களை பணியில் அமர்த்தலாம் என்ற தொழிற்சாலைச் சட்டத்தை காரணம் காட்டி அதிகமாக வளரிளம் பருவத்தினரை வேலைக்கு எடுக்கும் மனநிலை நூற்பாலை உரிமையாளர்களிடம் அதிகமுள்ளது. தாங்கள் சட்டத்தின் அடிப்படையிலேயே பணியாளர்களை தேர்வு செய்கிறோம். நூற்பாலைகளை நடத்துகிறோம் என்ற மனப்போக்கு உள்ளது. இந்தப் போக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம், ஐ.நா. உடன்படிக்கை, குழந்தைக்கான தேசியக் கொள்கைகளை மீறியதால் தோல்வியை காட்டுகிறது.**

**பரிந்துரைகள்:**

குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் – CLPRA 1986ஐ நீக்கம் செய்து விட்டு 18 வயது வரை எந்தத் தொழிலிலும் எந்தவொரு குழந்தையும் ஈடுபடுத்தப்படாவண்ணம் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். குழந்தைத் தொழிலாளர் நலத்துறை ஒரு குழுவை உருவாக்கி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து நூற்பாலைகளிலும் விசாரணை செய்து ஒரு அறிக்கை வெளியிட வேண்டும்.

நூற்பாலைகள் ஆபத்தானவை என்று சட்டத்திருத்தம் செய்ய வேண்டும். அனைத்து சட்டங்களிலும் 18 வயது வரை குழந்தைகள் வயது என்று திருத்தம் செய்ய வேண்டும். இந்திய அரசு தொழிலாளர் சட்டத்தில், 18 வயதுத் தாண்டியவர்களைத்தான் பணிக்கு அமர்த்த வேண்டும் என திருத்த வேண்டும்.

**நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பணிநேரம், பாதுகாப்பான பணிச்சூழல், மருத்துவவசதி, சமூக பாதுகாப்பு திட்டங்கள் முறையாக அனைத்து நூற்பாலைகளிலும் நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்பதை கண்காணித்து அனைத்தும் தொழிலாளர்களுக்கு கிடைத்திட தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்து அங்கு வாழும் மக்களுக்கு வறட்சி நிவாரணத் திட்டங்கள் உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டும்.**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பிரிவு 24, மற்றும் 14, 15, 19, 21, 21A, 23, வழிகாட்டு நெறிமுறைகள் பிரிவு 39(e), (f), 39a, 46, 47, 20 இவற்றின் கீழ் குழந்தைத் தொழில்முறை சட்டவிரோதமாகும். ஐ.நா. குழந்தை உடன்படிக்கை சரத்து 32, பொருளாதார சுரண்டல்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட

**இதன் தொடர்ச்சி பக்கம் 28ல்...**

# நகரத்தில் நடுக்கம்

**– திவ்யா காந்தி**

*பெங்களூரு பள்ளி ஒன்றில் 6 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டது, இந்தியப் பள்ளிகளில் எந்த அளவிற்குக் குழந்தைகள் பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. குழந்தைகளைப் பாதுகாப்பது தொடர்பான, எவ்வித நடைமுறைகளும் இல்லாமல் இந்தியப் பள்ளிகள் இயங்குகின்றன. தில்லியில் ஒரு கும்பலால் நடத்தப்பட்ட பாலியல் வன்கொடுமைக்குப் பிறகும் கூட, அதேபோன்ற வேறு பல கொடூர நிகழ்ச்சிகளுக்குப் பிறகும் கூட, பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு பாதுகாப்பான சூழல் என்பது இன்னும் ஒரு தொலைதூரக் கனவாகவே இருக்கிறது. அரைகுறை நடவடிக்கைகள் எவ்வித பலனையும் தரவில்லை.*

இந்தியாவில் தொடர்கிற குழந்தைகளுக்கு எதிரான வன்புணர்ச்சிக் கொடூரச் செய்திகளில் புதியதாக அண்மையில் பெங்களூரு பள்ளி ஒன்றில் 6 வயது சிறுமிக்கு, அந்தக் குழந்தையின் ஆசிரியராலேயே இழைக்கப்பட்ட கொடுமை சேர்ந்துள்ளது.

முதல் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த அந்தச் சிறுமி, பள்ளி வளாகத்தில் உள்ள பொருள்கள் வைப்பறையில், ஸ்கேட்டிங் ஆசிரியரால் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டார். அந்த ஆசிரியர், அவர் முன்பு பணியாற்றிய பள்ளியிலிருந்து, குழந்தைகளிடம் தவறாக நடந்துகொண்டதற்காக பணிநீக்கம் செய்யப்பட்டவர் என்பது பின்னர் தெரியவந்துள்ளது. அந்த ஆசிரியரின் மடிக்கணினி, கைபேசி ஆகியவற்றில், குழந்தைகள் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்படுவது தொடர்பான வீடியோ படங்கள் இருந்தன. இந்தச் சம்பவம் இந்தியப் பள்ளிகளில் எந்த அளவிற்குக் குழந்தைகள் பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. குழந்தைகளைப் பாதுகாப்பது தொடர்பான, எவ்வித நடைமுறைகளும் இல்லாமல் இந்தியப் பள்ளிகள் இயங்குகின்றன. பெருந்திறள் போராட்டங்களுக்குப் பிறகு கர்நாடக அரசு மாநிலத்தில் உள்ள பள்ளிகளுக்கான 70 அம்ச வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

இதேபோல் இந்தியப் பள்ளி ஒன்றில் நடந்த பாலியல் வன்கொடுமை தேசிய அளவிலும், உலக அளவிலும் ஊடகங்களில் ஒரு முக்கிய செய்தியாக வெளிவந்த இரண்டு மாத காலத்திற்குள் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தின் கர்ஜத் நகரில் விடுதியுடன் கூடிய ஒரு பள்ளியில், ஒதுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளின் அவல நிலைமை வெளிச்சத்திற்கு வந்தது. அந்தப் பள்ளியின் உரிமையாளர் அக்குழந்தைகளை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தியதோடு, ஆபாசப் படங்களைப் பார்க்குமாறும், அதே போல் அக்குழந்தைகள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளுமாறும் கட்டாயப்படுத்தியிருக்கிறார். அவர் சொன்னபடி நடந்துகொள்ள மறுத்த குழந்தைகளின் வாயில் மலம் ஊட்டப்பட்டது.

2009 முதல் 2013 வரை தேசிய குற்றப்பதிவு நிறுவனம் (என்.சி.ஆர்.பி.) பதிவு செய்த குழந்தை வன்புணர்ச்சி வழக்குகள் மொத்தம் 38,868. அவற்றில் பெரும்பங்கு வகிப்பவை அவர்களது வீடுகளிலும், பக்கத்து இடங்களிலும் நடந்த குற்றங்கள்தான். குழந்தைகளுக்கான இல்லங்கள், பள்ளிகள், சிறார் சீர்திருத்த இல்லங்கள் ஆகிய இடங்களில் கனிசமான அளவிற்கு இக்குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குழந்தைகள் தங்களது வீடுகள் இல்லாத நேரங்களில் பெருமளவுக்கு இந்த இடங்களில்தான் தங்களது நேரத்தைக் கழிக்கிறார்கள் என்று சென்னையைச் சேர்ந்த குழந்தை பாலியல் அத்துமீறல் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான துளிர் மையத்தின் இயக்குநர் வித்யா ரெட்டி கூறுகிறார்.

## பள்ளிகளில் பாதுகாப்பு

“குழந்தை பாதுகாப்பு கொள்கை” என்பது இல்லாத நிலையில், குழந்தைகளின் நலத்தை உறுதிப்படுத்த கடமைப்பட்டுள்ள நிறுவனங்கள், அவர்கள் பாலியல் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படும் இடங்களாக மாறுகின்றன. அதிகாரத்தில் இருப்பவர்கள் பற்றி சொல்ல வேண்டியதே இல்லை. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும் “தொழில்முறை குற்றவாளிகளாகவே” இருக்கிறார்கள். குழந்தைகளுடன் எளிதில் தொடர்புகொள்ளத்தக்க சூழல்களை அந்தக் குற்றவாளிகள் ஏற்படுத்திக்கொள்கிறார்கள் என்று வித்யா ரெட்டி கூறுகிறார். பெங்களூரு பள்ளியில் நடந்தது இதுதான்

என்றும் அவர் கூறகிறார். தற்போதுள்ள நடைமுறையில் உள்ள சட்டங்களால் உறுதிப்படுத்த முடியாத குழந்தைப் பாதுகாப்பு என்பதை, செயல்படுத்தக் கூடிய குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையால் உறுதிப்படுத்த முடியும். அதாவது, அத்துமீறல்கள் நடப்பதை தடுப்பதற்கான ஒரு பாதுகாப்பான சூழலை அந்தக் கொள்கையால் ஏற்படுத்த முடியும் என்கிறார் பெங்களூருவில் உள்ள தேசிய சட்டக் கல்வி நிறுவனத்தின் குழந்தைகள் சட்ட மைய ஆராய்ச்சி உதவியாளர் ஸ்வாகதா ராகா.

2012ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் (போஸ்கோ), கல்வி உரிமைச் சட்டத்தையும் சிறார் நீதி சட்டத்தையும் போல விரிவானதாக, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால், குழந்தைகளை அத்தகைய குற்றங்களிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து அந்தச் சட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை.

“எந்த ஒரு சட்டத்திலும் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை என்பது இன்னும் ஒரு தேவையாக மாறவில்லைதான். ஆனால், அத்தகைய ஒரு கொள்கை அல்லது நடைமுறை இருப்பது, குழந்தைகளுக்குப் பாதுகாப்பான, ஊக்கமளிக்கக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்துவதற்கு அவசியமாகும்,” என்கிறார் ராஹா.

### பாலியல் கல்வி

குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை என்பதில் பள்ளிகளில் ஆசிரியர்களையும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களையும் நியமிக்கிறபோது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் இருக்க வேண்டும். தாங்கள் தவறாக நடத்தப்படுவதை குழந்தைகள் புரிந்துகொள்ளவும், விளக்கவும் கூடிய மொழிநடையில் வாழ்க்கைத் திறன், பாலியல் கல்வி ஆகியவைத் தொடர்பான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கும் அந்தக் கொள்கை வழிவகுக்க வேண்டும். குழந்தைகள் தவறாக நடத்தப்பட்டதற்கான அறிகுறிகளை கண்டுபிடிப்பதற்கான பயிற்சியும் ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பள்ளிக்கு வெளியே நடக்கக்கூடிய அத்துமீறல்கள் குறித்தும் தெரிவிப்பதற்கு குழந்தைகளை ஊக்குவிப்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.


பணித்தலங்களில் பாலியல் துன்புறுத்தல்களை தடுப்பதற்காக என உச்சநீதிமன்றம் பிறப்பித்த விசாகா வழிகாட்டல்கள் (தற்போது அது பணித்தலங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்) (தடுப்பு, தடை மற்றும் தீர்வு சட்டம் – 2012 என கொண்டுவரப்பட்டுள்ளது) போல, குழந்தைகளின் கல்வி, தங்குமிடங்கள் சார்ந்த, செயல்படுத்தத் தக்க வழிகாட்டல்கள் உருவாக்கப்படுவது ஒரு தீர்வாக அமையக்கூடும் என்கிறார் பேராசிரியர் ஷுபதா மைத்ரா. இவர் மும்பையில் உள்ள டாடா சமூக அறிவியல் நிறுவனத்தின் சுகாதாரம் மற்றும் மனநல மையம், சமூகப் பணிகள் மையம் ஆகியவற்றில் போராசிரியராக உள்ளார். “விஷாகா வழிகாட்டல்களில் கூறப்பட்டிருப்பதைப் போல பள்ளிகளிலும் புகார்கள் குழு ஒன்று இருக்க வேண்டும். அந்தக் குழுவில் பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிக்கு வெளியே உள்ள வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெற வேண்டும். அந்தக் குழுவிற்கு, குழந்தைகளிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்படுவோர் மீது விசாரணை நடத்தவும், பணிநீக்கம் செய்யவும் அதிகாரம் இருக்க வேண்டும்,” என்கிறார் ஷுபதா.

### புதிய சட்டம் தேவையா ?

“தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களின் நிலைமை என்ன ? புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு முன்பாக, ஏற்கெனவே உள்ள சட்டங்களில் இருக்கக்கூடிய, குழந்தைகள் தவறாக நடத்தப்படுவது தொடர்பான விதிகள் முறையாக செயல்படுத்தப்பட வேண்டும்,” என்கிறார் வித்யா ரெட்டி. உதாரணமாக, நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான சிறார் இல்லங்களை தொடர்ச்சியாகக் கண்காணிப்பதற்கு மாநில அரசுகள் ஆய்வுக் குழுக்களை அமைக்க வேண்டும் என சிறார் நீதிச் சட்டம் சொல்கிறது. ஆனால், பல மாநிலங்களில் செயல்பாட்டுக் குழுக்கள் கூட அமைக்கப்படவில்லை என்று மனித உரிமைகளுக்கான ஆசிய மையத்தின் அறிக்கை (2013) தெரிவிக்கிறது.

அந்த இல்லங்கள் “நரகக் குழிகளாக” இருக்கின்றன, அங்கு “குழந்தைகள் பாலியல் தாக்குதல்களுக்கும் சுரண்டல்களுக்கும் மோசமாக நடத்தப்படுவதற்கும் உட்படுத்தப்படுகிறார்கள்,” என்று அந்த அறிக்கை கூறுகிறது. இந்தக் குற்றங்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும் அந்த இல்லங்களின் மேலாளர்கள், இயக்குநர்கள், உரிமையாளர்கள், அவர்களது உறவினர்கள், அவர்களது நண்பர்கள் என, அதிகார நிலையில் இருப்பவர்கள்தான் என்றும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

அதேபோல, குழந்தைகளுக்கு எதிரான கொடூரமான பாலியல் அத்துமீறல் குற்றம் ஒவ்வொன்றிற்கும் தண்டனைகளை நிர்ணயிக்கிற, நீதித்துறை, காவல்துறை மற்றும் மருத்துவத்துறையினர் பின்பற்ற வேண்டிய சிறப்பு வழிகாட்டல்களை வகுக்கிற போஸ்கோ சட்டம்




நிறைவேற்றப்பட்ட ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, சட்டப்பூர்வ நடைமுறைகளின் கடுமையான வழிமுறைகளிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப் படவில்லை.

### கேள்விப்படாதது, பார்வையில் படாதது

அண்மையில் வெளியான என்.சி.ஆர். அறிக்கையின்படி, 2013ம் ஆண்டில் நாடு முழுவதும் காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்ட, குழந்தை வன்புணர்ச்சி குற்றங்களின் எண்ணிக்கை 12,363. இது 5 ஆண்டுகளுக்கு முன் பதிவான குற்றங்களின் எண்ணிக்கையைவிட (5,368/2009) இரண்டு மடங்கிற்கும் அதிகமாகும். காவல்துறையில் இதுபற்றிப் புகார் செய்வது அதிகரித்திருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

**ஆதாரம்: The Hindu 27.07.2014**

...25ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும். எனவே, குழந்தைகளைப் பணியில் அமர்த்துவது அவர்களது உடல், மனம், ஆன்மீகம் மற்றும் சமூக வளர்ச்சிக்குத் தடையாகும்.

5. குழந்தை, பள்ளி முடிந்து பெற்றோருக்கு பணியில் உதவவும், வீடு சார்ந்த பணிகளில் வயல்வெளிகளில் பிராணிகளை பராமரிப்பது என்பது 18 வயது வரை தடை செய்யப்படவேண்டும். இது அவர்களை மெல்ல மெல்ல குழந்தைத் தொழிலாளர்களாக உருவாக்கி வந்ததற்கு பல உதாரணங்கள் உள்ளன (தீப்பெட்டி, பீடி, நூற்பாலைகள், கம்பளித் தயாரிப்பு போன்றவற்றில் லட்சக்கணக்கான குழந்தைகள் இப்போதும் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர்.)

6. வறுமையில் உள்ள குழந்தைகளின் குடும்ப வருமானத்தை உயர்த்துவதற்கும் அனைத்து குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்புவதற்கும் 18 வயது வரை எந்தத் தொழிலிலும் எந்தக் குழந்தையையும் ஈடுபடுத்தப்படாது என்பதை உறுதி செய்து சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதில் CACL திடமாக இருக்கிறது.

**ஆதரவு: குழந்தை உழைப்பு எதிர்ப்புப் பிரச்சாரம், தமிழ்நாடு (CACL - TN)**

# பாலியல் வன்புணர்ச்சியைத் தவறாகப் புரிந்து கொள்வதும் – இளம் சிறார்களைக் கண்டிப்பதும்

– மிருணாள் சத்தீஸ் மற்றும் ருக்மணி .எஸ்

*இளம் சிறார் சட்டத்தில் மாற்றங்களை முன்மொழிந்ததன் மூலம், அரசு யோசிக்காமல் அவசரகதியாக செயல்பட்டிருக்கிறது.*

கடுமையான வழக்குகள் மோசமான சட்டத்தையே உருவாக்கும் என்பது சட்டம் தொடர்பான ஒரு பொதுவான பழமொழி. புதுடில்லியில் 2012, டிசம்பர்16 அன்று ஒரு கொடூரமான பாலியல் வன்புணர்ச்சி சம்பவம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அந்தப்பெண் மரணமடைந்ததால் அது கொலையாகவும் மாறியது. அந்தப் பாலியல் பலாத்காரத்தில் ஒரு இளம் சிறுவன் பங்கேற்றான் என்று செய்தி வெளியானது. அந்தச் சிறுவன் 18 வயதிற்கு மேற்பட்டவரைப் போன்று, வழக்கமான குற்றவியல் நீதிமன்றத்திலேயே விசாரிக்கப் படவேண்டும், தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு இந்தச் செய்தி வழிவகுத்தது. ஒரு மோசமான சட்டத்தை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க இந்தக் கடுமையான வழக்குக் காரணமாகியது. அது, இளம் சிறார் சட்டம் 2000த்தில் முன்மொழியப்பட்டுள்ள மாற்றங்களில் தெரிகிறது. இந்த மாற்றங்களின் படி, கொடூரமான குற்றங்களைப் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட 16 வயதிற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் வயது வந்தவர்களாகக் கருதப்பட்டு, வழக்கமான குற்றவியல் நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படவேண்டும்.

16 வயதிற்கு மேற்பட்ட ஒரு சிறுவன் அல்லது சிறுமி, இளம் சிறார் நீதி மசோதா, 2014ன் பிரிவுகளில் பட்டியலிடப்பட்டுள்ள கொடூரமான குற்றங்களில் ஏதேனும் ஒன்றைப் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டால், அந்தக் குழந்தை வழக்கமான குற்றவியல் நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்படவேண்டுமா என்பதை இளம் சிறார் நீதிக் குழுமமே முடிவு செய்ய வேண்டும் என்று இந்த மசோதா குறிப்பிடுகிறது. இந்த நடைமுறை அதனளவிலேயே பிரச்சனைக்குரியது, ஏனென்றால் இளம் சிறார் நீதிக் குழுமம், வழக்கின் ஆரம்பக் கட்டத்தில் வெளிப்படுகிற உண்மைகள் மற்றும் குற்றத்தன்மையின் அடிப்படையில்தான் ஒரு முடிவை எடுக்கும். அரசின் இந்த நடவடிக்கை ஏன் பிற்போக்கானது என்பதற்கும் இளம் சிறார் நீதியின் மையக் கொள்கையையே மீறுவதாக இது உள்ளது என்பதற்கும் மேலே சொல்லப்பட்டவை தவிர பல்வேறு காரணங்கள் உள்ளன. ஆனால், பெரிதும் புறக்கணிக்கப்பட்ட இளம் சிறார் நீதிச் சட்டத்தின்மீது அரசின் கவனத்தையும் சமூகத்தின் கவனத்தையும் கவர்ந்த ஒரு குற்றமான பாலியல் வண்புணர்ச்சியைப் பற்றி மட்டும் இந்தக் கட்டுரையில் விவாதிப்போம். இளம் சிறார்கள் ஈடுபட்ட பாலியல் வண்புணர்ச்சி சம்பவங்கள் பற்றிய புள்ளி விபரங்களின் மீது போதிய கவனம் செலுத்தாமல், இளம் சிறார் நீதிச் சட்டத்தில் மாற்றங்களை முன்மொழிந்ததன் மூலம், அரசு, அவசர கதியில் செயல்பட்டிருக்கிறது என்று நாங்கள் வாதிடுகிறோம். இவ்வாறு வயதைக் குறைப்பதால் மனம் ஒப்பி உடலுறவில் ஈடுபடும் இளம் ஜோடிகள், ஒழுக்கக் கண்ணோட்டத்தோடு குறிவைக்கப்படுவார்கள். அவர்கள் குற்றவியல் சட்டத்தைப் பயன்படுத்தித் தண்டிக்கப்படும் அபாயம் இருப்பதையும் நாங்கள் விவாதிக்கிறோம்.

### சிறு வயதுத் தன்மையைக் குறைப்பது

வரைவு மசோதாவை மத்திய அமைச்சகம் ஏற்றுக்கொள்வதற்கான சூழலை அமைத்தபின்னர் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் மேனகாகாந்தி பிடிஐ செய்தியாளர்களிடம் காவல்துறையை பொறுத்தவரையில் கடந்த மாதம் நடைபெற்ற பாலியல் குற்றங்களில் 50 சதவீதம் 16வயதுக்கு குறைவானவர்களால் செய்யப்பட்டதாகும். அவர்களுக்கு இளஞ்சிறார் நீதிச்சட்டம் தெரிந்திருக்கிறது.அதில் தண்டனை குறைவு என்பதால் குற்றங்களை செய்யலாம் என்று அவர்கள் இத்தகைய குற்றங்களை செய்துள்ளனர் என்று அவர் கூறினார். ஆனால் தற்போது முன்மொழிந்துள்ள சட்டத்திருத்தங்களில் பாலியல் பலாத்காரம், திட்டமிட்ட கொலை, போன்ற குற்றங்களை செய்யும் இளஞ்சிறார்களை (16–18) வயது வந்தோர் பிரிவுக்கு கொண்டுவந்தால் அது அவர்களை தண்டனையை எண்ணி பயப்பட வைக்கும் எனவும் அவர் சொன்னார். ஆனால், அவரின் வாதம் தவறானது. 2013ல் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிபரங்களின்படி இந்தியாவில் நடைபெற்ற அனைத்து பாலியல் வன்புணர்ச்சி சம்பவங்களிலும் 3.4 சதவீதம் இளம்சிறார்கள் குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

நாம் முன்னமே குறிப்பிட்டிருப்பதைப்போல ,இளம் சிறார் சட்டத்தில் சிறுவர்களின் அதிகபட்ச வயதை 16 ஆக குறைக்க வேண்டும் என்ற குரல் எழுப்ப காரணமான முதல் வழக்கு 2012 டிசம்பர் 16 அன்று நடைபெற்ற சம்பவமாகும். இந்த வழக்கைத் தொடர்ந்து மும்பை சக்தி மில் வழக்கு,நாட்டின் பிறபகுதிகள் நடைபெற்ற வேறுசில பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளிலும் இளஞ்சிறார்கள் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.இந்த வழக்குகள் எல்லாவற்றிலும் பொதுவான அம்சம் என்னவென்றால், அவை அனைத்தும் அன்னியர்களால் நிகழ்த்தப்பட்ட

பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளாகும். அதாவது பாதிக்கப்பட்ட நபருக்கு குற்றம் இழைத்தவர் யார் என்று தெரியாது.ஆனால் பெரும்பாலான பெண்கள் அவர்களுக்கு தெரிந்த, அருகில் வாழ்பவர்களாலேயே பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள். கடந்த வருடம் டெல்லியில் பதிவான 1636 பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளில் 96 சதவீதம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தெரிந்த நபர்களே குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள். கடந்த 25 வருடங்களாக உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்ட பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளை பற்றி செய்யப்பட்ட ஒரு ஆய்வில் பாதிக்கப்பட்டவருக்கு குற்றம் இழைத்தவரை தெரியும் என்று தெரிய வந்துள்ளது.

மத்திய அமைச்சர் குறிப்பிட்ட “இளைஞர்கள்” என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்றால் புதுடில்லியின் மாவட்ட நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டு உள்ள பாலியல் வன்புணர்ச்சி வழக்குகள் பற்றி ‘‘தி இந்து’’ ஆங்கில நாளிதழ் ஒரு ஆய்வு நடத்தியது. முழுவதும் விசாரிக்கப்பட்ட வழக்குகளில் 40 சதவீதமானவை 16, 18 வயதுகளில் இருக்கும் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி வீட்டை விட்டு ஓடிப்போனவர்கள் சம்மந்தமானவை. அவர்கள் மனம் விரும்பி உடல் உறவு கொள்கிற சம்பவங்களில் பெண்ணின் பெற்றோர் பாலியல் வன்புணர்ச்சி வழக்கு பதிவு செய்கின்றனர். இந்த வகையான வழக்குகளில் பலவற்றில் ஆணின் வயது 18 முதல் 20க்குள்ளும் பெண்ணின் வயது 16 முதல் 18 வயது என இருக்கும்.


இளம்ஜோடிகள் ஓடிப்போவது அல்லது உறவில் இருக்கும் சம்பவங்களில் கடத்தல் வழக்கு பதிவு செய்வது ஒன்றும் புதிது அல்ல. 1972 மே 23 அன்று ஒரு 18 வயது பெண் மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் உள்ள தேசாய் கஞ்ச் காவல்நிலையத்தில் அழைத்து வரப்பட்டார். ஒரு இளைஞனும் அவனது உறவினர்களும் அவளை கடத்தி சென்றுவிட்டதாக அவளது சகோதரன் புகார் அளித்திருந்தான். மதுரா என்ற அந்த பெண் அவளைக்கடத்தியதாக சொல்லப்பட்ட ஆணுடன் காதல் உறவில் இருந்தாள். அதற்கு மதுராவின் அண்ணன் ஒப்புதல் அ ளிக்கவில்லை. இந்திய தண்டனைச் சட்டத்தின் ஒரு பிரிவான “ சட்டபூர்வ காப்பாளரிடமிருந்து கடத்துவது’’ என்ற பிரிவை குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை செய்தான் அந்தப் பெண்ணின் அண்ணன். அந்த சட்டப்பிரிவால் அந்தப்பெண் காவல்நிலையத்துக்கு வர வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானாள். அந்தப்பெண் காவல் நிலையத்தில் இருந்த இரண்டு காவலர்களால் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டாள். அந்த இரண்டு காவலர்களும் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். 1983ல் பாலியல் வன்புணர்ச்சி சம்மந்தமான இந்திய சட்டங்களில் மாற்றங்கள் வருவதற்கு இந்த வழக்கு முக்கிய பங்காற்றியது. ஆனாலும் தனது சகோதரியின் விருப்பத்தை ஒப்புக் கொள்ளாத ஒரு சகோதரனுக்கு அவளது விருப்பத்தையும் சுதந்திரமான பாலியல் தேர்வையும் வேரறுக்க குற்றவியல் சட்டத்தை பயன்படுத்தும் தகுதியை சட்டம் வழங்கியது என்றும் இந்த வழக்கிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இளம் வயதினரின் விருப்பத்தையும் பாலியல் தேர்வுக்கான சுதந்திரத்தையும் முறைப்படுத்த ‘‘கடத்தலை’’ பயன்படுத்துவது ஒரு பொதுவான வழக்கம்.அது இன்று வரை தொடர்கிறது.அவர்களின் இளம்பெண்கள் அவர்களின் இணையரோடு ஓடிப்போவதை விரும்பாத இளம்பெண்களின் பெற்றோர்கள் கடத்தல் வழக்கை பதிவு செய்கின்றனர்.ஏனென்றால் இந்திய தண்டனைச் சட்டத்தில் கடத்தல் பிரிவில் ஒரு பெண் தனது வாழ்க்கையை தானே முடிவு செய்து கொள்ளும் வகையிலான வயது வந்தோருக்கான வயது வரம்பு 18 என உள்ளது. ஒரு பெண் தனது மனம் விரும்பி பாலியல் உறவு வைத்துக்கொ காள்வதற்கான வயது 16 லிருந்து 18 ஆக உயர்த்தும் ஒரு பிற்போக்கான நடவடிக்கையை 2013ல் இந்திய நாடாளுமன்றம் எடுத்தது. மனம் விரும்பி ஒரு பெண் பாலியல் உறவுகளில் ஈடுபடுவதற்கான வயதை உயர்த்தியதால் கடத்தல் குற்றச்சாட்டோடு தற்போது பாலியல் பலாத்கார குற்றச்சாட்டும் சேர்ந்து கொண்டது. இது பெற்றோர்களுக்கும் சமூகத்துக்கும் பண்பாட்டு காவலர்கள் பணி செய்யவும் இளவயதினர் தாங்கள் சொந்தமாக தங்களின் துணையை தேர்வு செய்வதை தடுப்பதற்கும் ஒரு கூடுதல் கருவி கிடைத்து இருக்கிறது. சாதிகளை கடந்த,வர்க்கங்களை கடந்த, மதங்களை கடந்த ,காதல் உறவுகளை தடுக்க குற்றவியல் சட்டத்தை பயன்படுத்தவும் உதவுகிறது.

## திருத்தங்களுக்கு முந்திய வழக்குகள்

குறைந்தப்பட்ச தண்டனையான ஏழு வருட சிறைத் தண்டனையை குறைப்பதற்கான அதிகாரத்தை நீதிமன்றங்கள் முன்பு பெற்று இருந்தன. அந்த சமயத்தில் 2013 சட்ட திருத்தங்களுக்கு முன்னர் நிலுவையில் இருந்த பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளை நீதிமன்றங்கள் எவ்வாறு கையாண்டன? விரும்பி பாலியல் உறவு கொள்வதற்கான வயதுக்கு குறைவான வயதுடைய ஒரு இளம்பெண் தொடர்புடைய பெரும்பாலான வழக்குகளில் (அப்போது அதற்கான வயது 16) சம்மந்தப்பட்ட ஆண் 18 வயதுள்ளவராக இருந்தால் நீதிமன்றங்களில் அவனை தண்டித்தபிறகு வழக்கு விசாரிக்கப்பட்ட காலகட்டத்தில் அவன்சிறையில் கழித்த காலத்தை கணக்கில் கொண்டு ஏழாண்டுகளுக்கோ அல்லது அதற்கும் குறைவான காலகட்டத்துக்கோ சிறைத்தண்டனை அளித்தன. ஆனால் மனம்விரும்பி உடல்உறவு நடந்திருந்தால் அந்த பையனுக்கும் பெண்ணுக்குமான வயது வித்தியாசத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு தண்டனையைக் குறைப்பதற்கு நீதிமன்றங்களுக்கு இருந்த அதிகாரத்தை தற்போது வந்துள்ள புதிய சட்டம் வழங்கவில்லை.

# இளஞ்சிறார் குற்றங்களின் எண்ணிக்கை




எனவே, இந்திய புதிய சட்டம் இளவயது பெண்களோடு காதல் உறவு கொள்ளும் இளம் ஆண்களை குழந்தைகளோடு பாலியல் உறவு கொள்ளும் நபர்களாக சித்தரிக்கிறது.

***சிறார் நீதிச்சட்டத்தில் வயது வரம்பை குறைப்பது என்பது மனம் விரும்பி காதல் உறவுகளில் இருக்கும் இளம்ஜோடிகளை குறிபார்த்து வேட்டையாடும். பண்பாட்டு காவல்காரர் வேலையை செய்யும்.***

நாட்டின் கிராமப்புறங்களில் சாதாரணமாக நடக்கக்கூடிய ஒரு பதினைந்தரை வயது பெண்ணும் 17 வயது பையனும் மனம் விரும்பி பாலியல் உறவில் ஈடுபட்டால் என்னவாகும்? புதிய இளஞ்சிறார் நீதிச்சட்டத்தின்படி அந்த சட்டத்தின்படியான நீதிக்குழுமம் அந்தப்பையன் 18 வயதுக்கும் மேற்பட்டோரை போன்று விசாரணை செய்யப்பட வேண்டும் என முடிவு செய்தால் அவன் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவான். அத்தகைய நீதிமன்றங்களுக்கு குறைந்தபட்சம் பத்து வருடங்கள் சிறைத்தண்டனை அளிப்பதை தவிர வேறு வழியில்லை,. பாலியல் வன்புணர்ச்சி என்பது ஒரு பெண்ணின் பாலியல் தேர்வுக்கான சுதந்திரத்தின் மீதான உரிமை மீறல். விரும்பி பாலியல் உறவு கொள்வதற்கான வயதை அதிகப்படுத்துவதும் சிறார்த்தன்மையின் வயதை குறைப்பதும் ஒரு பெண்ணின் பாலுறவு சுதந்திரத்தை மேம்படுத்தாது. அதனை கட்டுப்படுத்தும். அப்படி கட்டுப்படுத்துவது மட்டும் அல்லாமல் ஒரு பெண்ணுக்கு தனக்கான ஒரு துணையை தேர்வு செய்வதற்கான உரிமை இருப்பதையும் அது மறுக்கிறது. அதற்கும் மேலாக அவளது துணைவனுக்கு எதிராக குற்ற வழக்குகள் பதிவு செய்வதற்கும் வழி செய்கிறது. மனம் விரும்பி செய்யப்படாத பாலியல் உறவுகளை பொறுத்தவரை இப்போதைய உடனடித்தேவை என்பது நடைமுறையில் இருக்கும் இளஞ்சிறார் நீதிமுறையை பலப்படுத்துவதுதான். சீரமைக்க வேண்டும் என்ற குறிக்கோள் திறன்மிக்க முறையில் செய்து காட்டப்படுகிறது என்பதை அதுதான் உறுதிப்படுத்தும். ஆனால் இதற்கு நேர்மாறானதை செய்வதற்குதான் அரசாங்கம் தயாராகி வருகிறது என நமக்கு வரும் தகவல்கள் காட்டுகின்றன. சட்டத்துக்கான அவசரகதியான மாற்றங்களால் நாம் விரைவில் வருந்தக்கூடிய நிலை வரும்.

**ஆதாரம்: தி இந்து 13.08.2014**

*For Private Circulation Only*



Courtesy: http://www.workaway.info/gfx/foto/6/8/1/9/6/681965536839/xl/1.jpg

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**
*# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsfoundation.org.in*